April 1935

N35·8·9
186850

480 4 80

REGD. No. M. 2302.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

OFFICE ... 25 APR 1... MADE...



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௮. § பலவான்குடி—யுவ—சித்திரை § திங்கள் ௧.

எண் 8 உள்ளுறை. 9 பக்கம்.


| எண் | உள்ளுறை. | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | நாட்டுக்கு வேண்டும் நன்மை | ... | 201 |
| 2. | சிவநேசனுக்கு வாழ்த்து | ... | 203 |
| 3. | மதிப்புரை மஞ்சரி | ... | ,, |
| 4. | சுவி இன்பம் | ... | 205 |
| 5. | சுலோக பஞ்சக விஷயம் | ... | 208 |
| 6. | சிவானுக்கிரகம் பரசுராமர் பெற்றது | ... | 209 |
| 7. | உமாஸ்துதி அர்ஜுனன் செய்தது | ... | 210 |
| 8. | அஸ்வத்தாமா பெற்ற சிவசகாயம் | ... | 212 |
| 9. | திருவள்ளுவர் திருநாட்கழக அறிக்கை | ... | 214 |
| 10. | ஆலய வரையறை | ... | 216 |
| 11. | சொல்வன்மை | ... | 218 |
| 12. | முத்திநாதன் | ... | 220 |
| 13. | மாகேஸ்வர பூஜை மகிமை | ... | 221 |
| 14. | நகைச்சுவை | ... | ,, |
| 15. | முருகவேளும் ஔவை மூதாட்டியும் | ... | 222 |
| 16 | மதிப்புரை மஞ்சரி | ... | 227 |
| 17. | தேவிகாலோத்ர ஆகமம் | | (73—80) |


ஆசிரியர்:— ராம. சு. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:—சென்ற மாதத்தில் இரண்டு மூன்று மழைகள் பெய்து ஏரி குளங்களுக்குத் தண்ணீர் வந்துளது.

நகரக்கூட்டம் கூடுவதற்குச் சீட்டனுப்பித் தெரிவிப்பது, கோயில் மணியம் பார்ப்பவரின் கடமையல்ல; நடப்புக் காரியக்காரர்தான் தெரிவிக்கவேண்டு மென்னும் மரியாதைக்கிரமத்தை நகரச் சிவாலயத்தின் நடப்புக் காரியம் பார்ப்பவர் உணர்வாராக.

குமார விநாயகர் திருக்கோயிலில் இம்மதி ௩௨ திருவோணநாள் நடராஜ ரபிடேகம் நடைபெறும்.

கோத்தமங்கலம்:—திருவாளர் ராம. சு. ராம. ராமன் செட்டியாரவர்கள் மகன் திருவளர் செல்வன் சுப்பிரமணியனுக்கு பவ பங்குனி-௨௫ இராயவரத்தில் திருமணம் நடைபெற்றது. ௨௬ புலவர் பேரவைகூடியது. ஆளுடையார் கோயில் தலபுராணிகர் பிர்ம்மஸ்ரீ சுந்தரசாஸ்திரியாரவர்கள் பார்வதி தேவியார் திருமணம், ஐயங்கார்குளம் சைவபுராணிகர், திரு அ. க. பொன்னுசாமிமுதலியார் முருகவேள் திருவவதாரம், புரிசை பெருஞ்சொற்கொண்டல் திரு, சு. முருகேச முதலியார் வள்ளியம்மையார் திருமணம் என்னும் பிரசங்கங்கள் புரிந்தனர். தமிழ்மறைவாணர் கோட்டையூர் தி. சிவலோகநாத தேசிகர் முதலானவர்கள் இன்னிசையுடன் தேவாராதி திருப்பாசுரங்களை ஓதினர். புலவர் பெருமக்கள், பேரவையிற் குழுமிய பெரியார் ஆகிய பலரும் மணமக்களை வாழ்த்தினர். புலவர் பெருமக்களின் தகுதிக்கேற்ற சன்மானங்கள் செய்யப்பெற்றன. எல்லாவகையானும் செந்தில்நாதன் திருவருளால் இனிது நிறைவேறியது.

டாமேஜ்சூட்:- தேவகோட்டை முன்சீப் கோர்ட்டு 1934ம்-ஞு O. S. 22ன் முடிவு. பலவான்குடியில் வெளியாகும் சிவநேசன் பத்திரிகையில் "க. ப. கரு. கருப்பன் செட்டியார் மானம்போனவழக்கு" "க. ப. கரு. கருப்பன் செட்டியார் கல்லெடுக்கவேண்டியவழக்கு" எனவெளியிட்டுள்ளமகுடங்கள் தனக்கு அவதூறு விளைப்பதாக வாதி பலவான்குடி கருப்பன் செட்டியார் ஒரு நூறு ரூபா பரிகாரம் கேட்டார். அவரை அவதூறு செய்யவேண்டுமென்று வெளியிடவில்லை; அவருக்கு அவதூறாக யிருப்பதால் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் என்று பிரதிவாதி இராமசாமி செட்டியார் 1935 மார்ச்சு 29௳ கோர்ட்டில் மிமோப் போட்டார். வழக்குத் தள்ளப்பட்டொழிந்தது. இது விவரத்தை செட்டி நாட்டுப் பத்திரிகை சில வாசக மாறுதல்களாக வெளியிட்டிருக்கிறது. "மகுடங்களிட்டு வெளியிட்ட செய்திகளால் தனக்குமான நஷ்ட மேற்பட்டு விட்டதாக" என்று கண்டிருப்பது தவறு. மகுடங்களால் மான நஷ்ட மேற்பட்டதாகவே வழக்கு.

பர்மா இந்தியதூது கோஷ்டி:— இக் கோஷ்டியின் தலைவர் கனம் செட்டி நாட்டு ராஜா அவர்களும்உடன் சென்றோரும் இங்கிலாந்தில் இந்தியாமந்திரியைக் கண்டு பேசி விவரத்தை அகில தன வைசிய மகா நாட்டுக்காரியதரிசி பள்ளத்தூர் திருவாளர் உ. அ. பெரி. மு. அருணாசலஞ் செட்டியாரவர்களுக்கு மார்ச்சு 15௳ தந்தி அனுப்பி 17௳ கிடைத்ததன் விவரம்:—

இந்தியா மந்திரியை நாங்கள் இன்று சந்தித்தோம். நமது கோரிக்கைகளை எடுத்து அவருக்குத்தெரிவித்தோம். நமக்குச்சாதகமாக முடிவுசெய்வாரென்றுஎதிர் பார்க்கின்றோம். ஏப்பிரல்மாதக் கடைசியில் உத்தியோகமுறையில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் பொழுது நமது நிலைமை தெளிவுபடுத்தப்படும்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

25 APR 1935 ... MADRAS

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

ஆண்டு ௪ | யுவ—சித்திரை: 1935—ஏப்ரல் | திங்கள் ௧.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## நாட்டுக்கு வேண்டும் நன்மை.

இத் தலைப்பைப் பிரார்த்தனையாகவும் கொள்ளலாம்; நாட்டுக்கு வேண்டும் நன்மை யாதெனக் கொண்டும் ஆராயலாம். ஆகவே, நாட்டுக்கு நன்மையருள வேண்டுமென எந்நாட்டவர்க்கும் இறைவராகிய தென்னாடுடைய சிவனாரைப் போற்றி பிரார்த்தனை செய்து கொண்டு நாட்டுக்குவேண்டும் நன்மையை ஆராய்வாம். நாட்டு நலத்திற்கு இன்றியமையாது வேண்டப் பெறுவது மழை. அது எதற்காக? நெற்பயிராதிய பொற்புறவோங்கிப் பலன்றருதற் பொருட்டு. வேற்றூரவர்களைக் காணுங்கால் மழை தண்ணீர் உண்டா என்று கேட்டுக்கொள்ளும் வழக்கம் தொன்று தொட்டு இன்றுமுண்டு. ஏன்? "மாரியல்லது காரியமில்லை" ஆகலின் பெரியோர்களும் "வான் முகில் வழாது பெய்க" என்பதாதிய வாழ்த்துக்களைக் கூறினர். எனவே, நாடு தழைக்க நல்ல மழைவேண்டும் என்பது எல்லோராலும் ஒப்ப முடிந்த ஒன்றாம். நாடு தழைப்பது நற்பயிர் வளர்தலாற்றான். அப்பயிர்கள் செந்நெற்பயிராதியவைகளே. அவைகளினும் சிறந்து முதன்மை பெற்று நாட்டுக்கு நற்பயனளிப்பது பொற்புறு சொற் பயிரே. இப்பயிர் தழைக்க கல்வி என்னும் ஊற்று நீரும், அறிவு என்னும் அருவி நீரும், சொற்பொழிவு என்னும் மழை வெள்ளமும் [illegible] இணையாயுள்ளவை. இம் மூவகை வெள்ளமும் பெருகிச் சோறு பயிர் தழைத்தால் நாடு

செழிக்கும். சொல் என்பதும் மொழி என்பதும் ஒரே பொருள். மழை வளம் போல மொழிவளமும் செறிந்தால் தான் நாட்டுக்கு நன்மை சிறக்கும். நாடுகள் பல. அந்தந்த நாடுகளுக்கு அந்தந்தநிலங்களுக்கு உரிய வித்துக்களைத் தெளித்துப் பயிர்களை வளர்த்துப் பலன் பெறுவதே நேர்மை. பிறநாட்டவர்களெல்லாம்தம் நாடுகளில் தம் நாட்டுப் பயிர்களையே வளர்த்துத் தாங்கள் நலம் பெறக் கண்டும் நம் நாட்டவர்கள் நம் நாட்டில் நம்நாட்டுக்குரிய பயிரைவளர்க்காமல் பிறர் நாட்டுப் பயிரை வளர்த்து நம்நாட்டு பயிரை இழத்தல் தகுமா? என்பதை நம் நாட்டவர் ஒவ்வொருவரும் நன்றாக ஆழ்ந்து சிந்தித்துத் தெளியவேண்டும். அங்ஙனம் தெளியுங்கால் பிறநாட்டுப் பயிராகிய ஆங்கிலமானது நம் நாட்டு பயிராகிய தமிழுக்குக் களையாக தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறதென்பது புலப்படும்.

நாடு என்பது மொழியின் பெயரை முதலாகக் கொண்டு வழங்குகிறது. தமிழ் நாடென்னும் இந் நாட்டில் வழங்கும் தமிழ் மொழியை ஆங்கில நாட்டு மொழி வந்து விழுங்க விட்டுக் கொடுத்து நம் நாட்டு மொழியை இகழ்ந்து, பிறநாட்டு மொழியைப் புகழ்ந்து போற்றுதல்தானா பாரத நாட்டுக்குப் பாடுபடுவதாகப் பறைசாற்றுவோரின் தேச சேவை? வேறொரு சுயராஜ்யம் எதுவும் வேண்டாமே! நம் நாட்டு மொழி முற்றும் பறிபட்டு போகாமல், நம் நாட்டுச் சுதந்தரத்தை நாம் அனுபவிக்கச் செய்து கொண்டால் போதுமே!! தமிழ் என்றால் இனிமை என்று பொருளிருக்கவும் ஆங்கில மோகம் அதிகரித்தவர்களுக்குக் கசப்பாகத் தோற்றுகிறதே!!! ஆங்கில மொழிவளர்ச்சிக்காக நம்நாட்டுப் பொருள்களின் அழிவுக்கு எல்லையுண்டா? அதைக் கற்று உத்தியோகம் புரிந்து பெருத்த ஊதியத்தை பெறுகின்றாரைக் கண்ட பலரும் பேராசைப் பட்டுத் தம் மக்களை ஆங்கிலம் பயிற்றவே தம் உடைமைகளை விற்றுப் படிப்பித்தும் பலனைப் பெருங் கவலையுடன் எதிர்ப் பார்த்தும் பெரிதும் கஷ்ட நஷ்டங்கட்கு ஆளாகின்றனர். ஆங்கிலம் கற்ற நம்மவர்கட்கு ஆங்கில நாட்டிலிருந்து வேதனம் வழங்கப்படுவதில்லை. இந் நாட்டிலிருந்துதான் வழங்கப் பெறுகிறது. அரசியல் நடவடிக்கைகளை அந்தந்த நாட்டு மொழிகளால் நடத்துவதனால் முறை பிறழ்ந்து போகமாட்டாது. ஆகவே, நாட்டுக்கு வேண்டும் நலம் நாட்டு மொழியே. அருமைத் திருவாசகத்தில் நாட்டின் பெருமையை நாட்டிய மணிவாசகனார் திருவவதரித்தநாட்டு மக்களாகிய நாம் நம் நாடு தழைக்கவேண்டும் வழியை நாடி யுழைத்து நலம்பெற தேச ஊழியர்கள் முன் வரவும் நாட்டமூன்றுடைய நாயகன் முத்தமிழ் வளஞ் சிறந்து நாடு செழிக்க நல்லருள் புரியவும் வேண்டுகின்றோம்.

86950

# சிவநேசனுக்கு வாழ்த்து.

(பாபநாசம் கணபதி மந்திரம்
உயர்திரு முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமியவர்கள்)

"சிவநேசன்" மிக்கமகிழ்ச்சிதந்துவருகின்றது. சுருங்கச்சொல்லின் சிவநேசனுக்குச்சிவநேசனே நிகராம் என்பது எனதுகருத்து.

(திருநாவலூர் போர்டு ஆண்பாடசாலைத் தலைமையாசிரியர்
திரு. S. சந்தானகோபாலையரவர்கள்)

தமிழும் சைவமும் தழைக்கச் செய்வதே தன்கடமை எனக் கொண்டது; சீரிய சிவநேசனே. 'சிவம்' என்னும் மங்கலப் பெயரை முடியிற் சூட்டிய சிவநேசன், சிவம் பெருக்கி அச்சிவத்தைப் போல வளர்ந்து சிறப்புற்றுத் திகழ சிவபெருமானாரின் திருவருளைச் சிந்தித்து வந்தனை செய்கின்றேன்.

## மதிப்புரை மஞ்சரி.

தீண்டாதார் ஆலயப்பிரவேச நிக்ரஹம் (தடை):—என்னும் சர்வசந்தேக நிவாரணம் முதற்பாகம் சர்வமதாதீத சுத்தாத்வைத சத்தி தரிசனசித்தாந்த சைவப்பிரசாரக உயர்திரு மா. நீலகண்ட சித்தாந்தியாரவர்கள் இயற்றிவெளியிட்டது. தீண்டாதார் எனப்படுவோர் திருக்கோயிலுட் போகக்கூடாதென்பதற்குவரானமான ஆகமப்பிரமாணங்களும் வேதஸ்மிருதி மேற்கோள்களும் காட்டப்பட்டதோர் வசனநூல் காந்தி பின்பற்றுவதாகக் கூறும் கீதையினின்றும் பல பிரமாணங்கள்காட்டி காந்திமதத்தைக் கண்டிப்பது; எல்லோராலும் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தக்கவிடை சாற்றுவது. காந்திமதத்தைப் பூர்வபட்சமாகவும் அதற்குச் சமாதானமாதிய சித்தாந்தமாகவும் பல நூற்பிரமாணம், யுத்திப்பிரமாணம், அநுபவப்பிரமாணம் ஆகிய மூவகைப்பிரமாணங்களைக் கொண்ட இருபது அத்தியாயங்களால் பக்குவாபக்குவங்களுக்குத் தகுந்த பேதா பேதங்களையறியாத காந்தியின்மதத்தைப்பொடிப்பொடியாக்கிக்காற்றிற்பறக்கடிப்பது. இதனைநம்சிவநேசனில் ஒவ்வொரு அத்தியாயமாக வெளியிடச் சித்தமாயிருப்பதால் இதன் பெருமையை ஈண்டு விரித்திலம். 70-பக்கம் கொண்ட வசனபுத்தகம் விலை, அணா, ஆறு. சென்னைசூளை வேப்பேரி-7. சுப்பையநாயுடு வீதி உயர்திரு, மா. நீலகண்ட சித்தாந்தியாருக்கு எழுதிப் பெறலாம்.

அகில இலங்கை இந்துமகாநாடும்சாதியும்:—யாழ்ப்பாணம் சைவாபிமான சபையார் வேண்ட ஷை சபையில் சண்டிருப்பாய் திருவாளர், க. சோமசுந்தரம் பிள்ளை B. A. அவர்கள் செய்தபிரசங்கம். ஷை சபையார் பதித்து வெளியிட்டது. அகில இலங்கை இந்து மகாநாட்டில் தலைமை வகித்த திருவாளர், ம. பாலசுப்பிரமணிய முதலியார் B. A. B. L. அவர்கள் "தீண்டாமை விலக்கப்படவேண்டும், சாதி வேற்றுமை யென்னுந் தீமையானது, அன்பு நெறி, அருள்நெறி எனப்படும் நம்சமயத்திற்குமுற்றிலும் மாறுபட்டதாகும்" என்ற கூற்றை மறுத்து வட நூல்களைத் தவிர தேவாராதி திருமுறைகளும் திருக்குறள் முதலாம் நீதி நூல்களும்சித்தியாரதி ஞானநூல்களும் சைவ சமய சாத்திரங்களும் சாதி குலம் இல்லையென்று கூறவில்லை. தேவர், மனிதர், மிருகம், பறவை, தாவரம் ஆதிய எல்லாவகையிலும்சாதியுண்டுசாதிமுறைமையை விதிக்கு விரோதமாய்த் திருத்தப்படாதென்பதைவிளக்குவது. சாதி பேதம் வேண்டாமென்போர் சமய

1135-8-9

பேதமும் வேண்டாமென்றே கூறநேரும். அதீத நிலையில் யாதொருபேதமுமில்லைத் தானே? சாதி, சமயம் என்னும் இரண்டில் ஒன்றை வேண்டாமென்பதும் ஒன்றைவேண்டுமென்ப தும்பேதமேயன்றோ?

யுவவருஷ வாக்கிய பஞ்சாங்கம்:—யாழ்ப்பாணம் சோதிட விற்பன்னராகிய பிரமஸ்ரீ இரகுநாதையரவர்கள் தாபித்த சோதிடபரிபாலன மடத்திலிருந்து அவர்களின் தத்த புத்திரர் பிரமஸ்ரீ சிவராமலிங்க ஐயரவர்களாலும் பௌத்திரர் பிரமஸ்ரீ ச. பஞ்சாக்ஷர ஐயரவர்களாலும் கணிக்கப்பெற்ற 78-ம் வருடப் பதிப்பு. வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம் கரணம் ஆதிய ஐந்தங்கங்கள், கிரகபாதசாரங்கள், விவாகப் பொருத்தங்கள், விவாகாதி சுபமுகூர்த்தங்கள், விரதாதி நிர்ணயங்கள், தேவாலய உத்ஸவங்கள், நாயன்மார் குருபூஜைத்திருநாள், ஆழ்வாராதியர் திருநாள் முதலான பலவகைப்பொருள்களையும் பிழையறத் தெளிவுற விளக்கிக் காட்டுவது. நூறுபக்கம் கொண்ட இப் பஞ்சாங்கம் விலை அணா ஐந்து. இ. சி. இரகுநாதையர் சோதிடபரிபாலனமடம் கொக்குவில் (இலங்கை)என்னும்விலாசத்திற்குஎழுதிப்பெறலாம்.

அம்மையார் அருணூல்:—அம்மையார் என்றால் பிறவா இறவாப்பெரியோராகிய இறைவராலும் அம்மையே என்றழைக்கப்பெற்ற காரைக்கால் அம்மையார் என்பதைச் சைவ நன்மக்கள் யாவரும் அறிவர். அவ்வம்மையார் அருளியனவும் பதினோராந்திருமுறையில் வைத்துப் போற்றப் பெறுவனவுமான அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை ஆகிய இரண்டிற்கும் திருமலைராயன் பட்டினம் சைவசித்தாந்த சாகரம் உயர்திரு உ. அருணசல முதலியாரவர்கள் உரை இயற்றி அவ்விருமூலமும் உரையும் திருஆலங்காட்டு மூத்ததிருப்பதிகம் இரண்டும் சேர்த்துப் பதித்து வெளியிட்டுள்ளது. இவ் வருணூல்களின் திருப்பெயர்களாலேயே நூல்களின் சிறப்புயாவரும் அறிவர். சைவத்திருமுறைகளுள் அமைந்த அவைகளின் சிறப்பை ஒரு சிறிதும் அறியாதயாம் எடுத்துக்காட்டுந் தரத்ததன்று. அரும்பெருஞ் சிறப்புவாய்ந்த அற்புதத் திருவந்தாதிக்கும் திருவிரட்டை மணிமாலைக்கும் இயற்றிய உரையின் சிறப்பைத்தான் எங்ஙனம் கூறமுடியும். எனினும் 'அற்புதவந்தாதியுரை ஆன்றோர்க்குத்தன்னுடையவிற்பத்தி தோன்ற விளம்பினன்-உற்றஇரட்டை மணிமாலைக் கேற்குமுரையும் திரட்டருணசலச் செம்மல்' என உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமி அவர்களும் பிறரும் பாராட்டியிருப்பதால் யாவரும் பாராட்டற் பாலதேயாம். விலை அணா ஐந்து. சைதாப்பேட்டை 77 சோன்ஸ் ரோட்டு உ. அரு. முத்துக்குமாரசுவாமி முதலியார், உ. அரு. நடேச முதலியார்; திருமலை ராயன்பட்டினம் நாகாபரணப் பிள்ளையார் கோவில் தெரு உ. அருணசல முதலியார் ஆகிய திருவாளர்களிடம் கிடைக்கும்.

திருவருட் பிரகாச வள்ளலார்திவ்ய சரித்திரம்:—வடலூர் ஸ்ரீராமலிங்க சுவாமிகள் என வழங்கும் வள்ளலார் மலரடிக் கன்பு பூண்டொழுகும் கும்பகோணம், பெரியகடை வீதி ஜவுளி வர்த்தகராகிய அருட்பெருஞ் செல்வர், மு. ச. சரவணமுத்துச் செட்டியாரவர்கள் 281 கலிவெண்பாக்களாலும் 64 சிந்துகளாலும் ஓர் அகவற்பாவினத்தாலும் ஆக்கியது. சிவானந்தத்தேன் பிலிற்றும் திருவருட்பாவை அருளிய திருவருட் பிரகாச வள்ளலாரின் திவ்ய சரித்திரத்தை யாவரும் எளிதில் படித்து இன்புறத் தக்க முப்பது பக்கம் கொண்ட இப்புத்தகம் சுவாமிகளின் திருவுருவப்படத்துடன் கூடியது. இதன் ஆக்கியோருக்கு எழுதிப் பெறலாம், விலை அணா ஒன்றரை.

# கவி இன்பம்.

(சென்னை, தொண்டை மண்டலம் துளுவவேளாளர் உயர்கலாசாலை ஆசிரியர் அ. தம்பிரான் முதலியார் அவர்கள்.)

இச்சீரிய தலையங்கத்தில் கவியென்பது யாதென முதற்கண் ஆராய்ந்து பின்னர் அத்தகை கவிகளின் வாயிலாக நல்லிசைப் புலவர் பெருமக்கள் நமக்குத்தந்த இன்பங்களையும் பற்றிக்கூறி முடிப்பாம்.

கவி:— எழுத்து முதலா வீண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.
(தொல்காப்பியனர்.)

எழுத்து, அசை, சீர், தளை, தொடை, அடி முதலாகத் தொடங்கி, குறிப்பிட்டபொருளைப் பொருந்தக்கட்டுதல் யாப்பாகும். யாப்பு என்றால் கட்டுதல் என்று பொருள்படும்.

பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

என நன்னூலாசிரியர் நன்கியம்புகின்றார். நன்னூலிற்காட்டிய உவமையால் ஒரு விசேடம் உண்டு. அஃதாவது உயிரில்லாவிடில் உடல் பிணமேயாகும். சத்தில்லாவிடில் எப் பொருளும்சாரமற்றதாகுதன்றோ. அத்தன்மையேபோன்று அசையும் சீரும் அடியும் முதலாய உறுப்புக்கள் அமைந்துகிடைப்பினும், சத்தில்லாவிடின் செய்யுளும் சாரமற்றதாகும். ஆகவே, கவிகள் தங்கள் மனத்திற் குறித்த பொருளாகிய உயிரைச் செய்யுளாகிய உடலில் அமைக்கும் சிருட்டி கர்த்தர்கள் எனலாம். 'மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்' என்று கூறிய குமரகுருபர அடிகளார் கருத்தும் இதுவேயாகும்.

சொல்லானது பொருளையறிவதற்குக்கருவியாகவுள்ளது. எவ்வாறெனின், 'தாமரைபடர்ந்த பொய்கை' என்று ஒருவர் கூறின், நாம் அப்பொய்கையை நம் கண்களின் முன்னர் தோன்றுவதுபோல் நம் மனஅறிவால் அறிகிறோம். அத்தகை சொற்கள் பலவால் ஆக்கப்பட்டது பாட்டு. மெய், வாய், கண், மூக்கு, செவிமுதலாய

புலன்களாலறியப்படும் அழகைத் தன்னகத்தே பொதிய வைத்துள்ளது. அவ்வழகை அப்பாட்டு நம் மறிவிற்குப் புலப் படுத்துகின்றது. அவ்வறிவுதான் நமக்கு, மாறுதலிலா, குறையா ஓசையை யுடைத்தாய இன்பங்கொடுக்கின்றது. அவ்வின்பந்தான் நாம் பாட்டென்றறிதல் வேண்டும். மற்றும் எங்கெங்கு நம் அறிவைத் தன்வசப்படுத்துகின்றசிறந்த அழகும் சீரியவொளியும்விளங்கித் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்றே யறிதல் வேண்டும்.

இளவேனிற்காலத்து மாலை வேளையாகவும், குளிர்ந்த சோலைக் கணித்தாயுள்ள தாமரை நிறைந்த பொய்கைக் கருகில் சந்திரகாந்தக் கல்லமையப்பெற்ற மேடையாயும், வெள்ளிய மல்லிகை மலர்ப்பந்தராய்த் தழைத்திடவும், பால்நிற நிலாக்காலமாயும் இளந்தென்றல் தென்புடன் வீசவும், நரம்புகள் நிறையப்பெற்ற வீணையினின்று மாசில் இன்னிசை எழவும், களவொழுக்கம்பூண்டு காதலினாற் கட்டுண்ட இளைஞரும் மகளிரும் தம்முள் ளொத்த நெகிழாத வன்பின் மிகுதியால் தோளொடுதோள் பிணையத்தழுவிக்கொண்டு களிப்புடன் நயவார்த்தைக ளுரையாடி உலவுந்தோறும் பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்சி விளையாடுதலையும், செந்தேன்சொரியும் அச் செய்மலர்ச் சோலையில் வண்டுகள் பண்ணமைந்த இசை பாடுதலையும் மரப்பொந்துகளில் மணிப்புறாக்கள் மாந்திக் கூவுதலையும், ஆண்மயில்கள் தம் அழகிய தோகையினைவிரித்துப் பெடைமயில் கண்டு களிக்க ஒருபுறம் ஆடுதலையும் கண்ணாரக் கண்டு, நறுமணமும் அழகும் ஒருங்கே யமைந்திலங்கும் மலர்களைத் தாவிப்பறித்துக் காரனைய கூந்தலில் மாறிமாறியணிந்து அமிழ்தினுமினிய ஆன்றநேச மொழிகள் பல பேசிக்குலவும் அக் காதலர்கள் செல்லுமிடந்தோறும் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும்.

சுருங்கக் கூறுமிடத்து, எங்கெல்லாம் நம் அறிவைக் கவர்கின்ற பேரழகு உலக இயற்கையில் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்பது உணரப்படும். எனவே, உலக இயற்கையில் எல்லாம் பாட்டு உண்டென்பது துணிபு. பாடு என்பது பாட்டு என்றாயிற்று. பாடு என்றால் பெருமை யென்று பொருள். ஆகவே பாட்டு என்றாலும் பொருமை என்றாலும் ஒன்றே யென்பது தெளிவு. ஆதலின் பெருமை எங்கெங்கு உளதோ அங்கெல்லாம் பாட்டுண்டெண்டறிதல் வேண்டும். Milton (மில்டன்) என்னும் ஆங்கிலப் பேரறிஞர் "பாட்டென்பது மக்கள் மன அறிவினின்றும் வடித்திறக்கிய தூய அமிழ்தம் ஆம்" என்று தெளிவாகக் கூறிப் போந்தார்.

**காவியக்காரரும் ஓவியக்காரரும்:**—இனி, இங்ஙனம் இயற்றப்பட்ட பாட்டு உலக இயற்கையில் காணப்படும் அழகுடன் பெரிதும் பொருந்தி நடத்தல் வேண்டும். சற்றுக்கூர்ந்து நோக்குமிடத்து



பாட்டியற்ற வல்லோனான நல்லிசைப்புலவனுக்கும் உலக இயற்கையைப் பலவர்ணங்கள் குழைத்துத் தீட்டிக்காட்டுகின்ற ஓவியக் காரனுக்கும் நெருங்கிய ஒற்றுமை யுண்டென்பது புலப்படும். ஆயினும், ஓவியக் காரனால் காட்டப்பெறும் படம் கண்புலனுக்கு மாத்திரம் தோன்றும் நல்லிசைப் புலவனால் இயற்றப்பெறும் பாட்டோ கண் முதலான புலன்களின் அகத்தே விளங்கும் உள்ளத்திலே தோன்றும். ஓவியக்காரன் தான்தீட்டுவதாக எடுத்துக்கொண்ட ஒரு பொருளைப் பலகாலும் நுட்பமாக ஆராய்ந்தளந்து பார்த்துப் பின்னர் அதைத்திறம்பட வரைய வேண்டியிருக்கின்றது. அங்ஙனம் தீட்டும் அப் படத்தில் ஒரு சிறுவழுவிருந்து விட்டாலே அப் படத்தின் பொலிவு முழுதுமே குலைகின்றது. காவியக்காரனோ அத்தன்மையைப்போல ஒவ்வொன்றையும் விரித்துரைக்க கட்டுப்பாடுடையானல்லன். புலனறிவுக்கு இன்பம் ஊட்டுபவன் ஓவியக்காரன். மனவறிவுக்கு இன்பங்கொடுப்பவன் இன்னிசைப் புலவன். மனவறிவானது புலனறிவிற்கெட்டாத நுண்ணிய பொருளையும் தானே விரைவில் விரித்தறியும் ஆற்றல் வாய்ந்தது. அணுவை மலைபோலப் பருக்கச் செய்யும். மலையை மறு நொடியில் ஓர் அணுவினுங் குறுகிய பொருளாக்கும். அஃதன்றியும் அசையாமல் ஓரிடத்திலிருந்துகொண்டே நீண்ட தூரத்தேயுள்ள காசி, லண்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலாய பல விடங்களுக்கு விரைந்தேகித் திரும்பும் ஆற்றலுடையது. இவ்வித ஆற்றல்களமைந்த மன அறிவை நல்லிசைப்புலவன் தான் வேண்டும்போதெல்லாம் தன் விருப்பப்படி கையாளச் சுளன்றுடும். ஓவியக்காரன் தீட்டவிருக்கும் தாமரை படர்ந்த பரந்ததொரு பொய்கையை வரைவதன்முன்னர் அவ்வோவியக்காரன் பலநாளும் பலகாலும் ஆங்குப்போந்து அதன்இயற்கையமைப்பினையும், அதன் அளவுகளையும், நீரின் நிறைவினையும், நீரில் படர்ந்துள்ள தாமரைஇலைகளையும், இலைகளின் மத்தியில்தோன்றும் தாமரை மொட்டுகளையும், அடர்ந்து மலர்ந்த தாமரை மலர்களையும், அப் பொய்கையின் வெளித்தோற்ற அமைப்பினையும் அங்குள்ளவாறே பல வண்ணங்களைக் குழைத்து இரட்டுத் துணியின்மீது மிகவும் நுட்பமாகவும் கருத்துடனும் வருந்தி எழுதிக் காட்ட வேண்டியவனா யிருக்கின்றான். இஃது அவனுக்கு பலநாள் வேலையாகின்றது. ஆனால் காவியக் காரனோ "செந்தாமரைகள் அடர்ந்து சிறந்து பொலியும் பொய்கை" என்று சில சொற்களைத் திறம்படச் சேர்த்துக் கூறுதல் ஒன்றானே ஒரு நொடிப்பொழுதில் அவ்வோவியக்காரனாலும் எழுதிக்காட்ட முடியாத ஓர் அரிய உணர்ச்சியை நம்மனத்தகத்தே விளைவிக்கும் ஆற்றலுடையவனாகின்றானன்றோ. இஃது இவனுக்கு மிக எழிதிலே முடியும் செயலாகும். ஆதலின் ஓவியக்காரனைவிட காவியக்காரன் பலகாலும் சிறந்தவனென்பது நன்கு தெளிவாகின்றதன்றோ. (தொடரும்)

உ

# சுலோக பஞ்சக விஷயம்.

---

(சிவபாரத்துவ நிரூபண சிகாமணி,
பொன்னேரி-தி-மா-ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள்)

## சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு.

1. உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலின்
2. தசரதன் மதலை தாபித் தேத்தலின்
3. கண்ணன் கயிலையில் கண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலின்
4. தனது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலின்
5. ஆக்கவற் கிரங்கி யாழியீந் தருடலின்
6. ஐங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலின்
7. அமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலின்
8. தென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலின்
9. அவுணர் மூப்புர மழியவில் வாங்கலின்
10. தக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலின்
11. தனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
12. மாநுட மடங்கலை வலிதபக் கோறலின்
13. மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை இளைத்துச் சாத்தனைத் தருதலின்
14. ஆழ்கடல் வரைப்பி னொன்றோ ரேகர்
அன்புமீ தூர வருச்சனை யாற்றலின்
15. நான்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலின்
16. ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின்
17. இருவரு மன்னமு மேனமு மாகி
அடிமுடி தேட வழற்பிழம் பாகலின்
18. பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையின்
19. கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பில்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
20. முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்
21. அயன்சிர மாலை யளவில வணிதலின்
22. ஞானமும் வீடும் பேணினர்க் குதவலின்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்
உம்பர்க ளெவர்க்கு முயர்ந் தோன்
என்பது தெளிக வியல்புணர்ந் தோரே.



இப் பெயர்ப்பைத் தயாசிந்துவாகிய ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் அருளினார்கள். இதற்கு மூலகிரந்தம் வடமொழியிலுள்ளது. அதன் பெயர் சுலோக பஞ்சகம் என்பது. அதனை யருளிய மகான் ஸ்ரீமத் ஹரதத்தாசாரிய சுவாமிகள். அவர்கள் காலம் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முந்தியது. அக்கிரந்தத்தின் உற்பத்தி அதியற்புதமானது. அதனை ஸ்ரீமத் ஹரதத்தப் பிரபுவின் சரிதத்தைப் படித்தறிக. அக்கிரந்தம் வடிவிற் சிறியதாயினும் அதன் அர்த்த வைபவம் சாலவும் விசாலமானது. ஸ்ரீ சிவபிரானாரே பரமாத்மா வென்பதை அது. இருபத்திரண்டு காரணங்களால் வஜ்ரலேபமாக நாட்டும். அக் காரணங்கள் ஆன்மகோடிகளை ஸ்ரீ பரசிவப் பிரபுவின் பாதாரவிந்தங்களில் பக்தி பண்ண வைத்து ஆனந்திக்கச் செய்யும் மகாத்மிய முடையன. ஆகையால் யாம் அவைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பிரபல பிரமாண சகிதம் விளக்கிவருவாம்.

---

## சிவானுக்கிரகம் பரசுராமர் பெற்றது.

ஸ்ரீ உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்ய ரவர்கள் மொழிபெயர்த்த கர்ண பர்வம் 28-வது அத்யாயத்திரட்டு. சென்னை: கமர்ஷியல் பிரஸ்; 1923-ம் வருஷப்பதிப்பு.

(ஜமதக்நிக்கு) ராமரென்ற பிரஸித்தரான புத்ரரிருக்கிறார். அந்தராமர் அஸ்திரங்களை அடைவதற்காகக் கடுந்தவம்புரிந்து உருத்திரரைப் பிரஸன்னராகும்படி செய்தார். சங்கரர் தமது ரூபத்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்பித்தார். அவர், ‘ராம! ஸந்தோஷமடைகிறேன். உனக்குமங்களம். உன்னுடைய விருப்பமும் அறியப்பட்டுவிட்டது. ஆத்மாவைப் பரிசுத்தமாகச் செய்துகொள். இவையெல்லாவற்றையும் அடைவாய். எப்பொழுது, நீ பரிசுத்தமாவாயோ அப்பொழுது உனக்கு நான் அஸ்திரங்களைக் கொடுப்பேன். பார்க்கவ! தகுதியற்றவனையும் திறமையற்றவனையும் அஸ்திரங்கள் கொளுத்துகின்றன’ என்றார். சூலபாணி இவ்வாறாகச்சொல்ல, பரசுராமர் பிரபுவை முடியினால் வணங்கி ‘தேவேசரே! எப்பொழுது என்னை நீர் அஸ்திரங்களைத் தரிக்கும் விஷயத்தில் யோக்யனென்று அறிகிறீரோ அப்பொழுது சுஸ்ருஷை செய்கின்ற எனக்குத் தேவரீர் அஸ்திரங்களைக் கொடுக்கவேண்டும்’ என்றார். பிறகு, அந்தப் பரசுராமர் தவத்தினாலும் விரதத்தினாலும் நியமத்தினாலும் ஹோமங்கள் மந்திரங்கள் இவைகளை முதன்மையாகக் கொண்ட பூஜைகளாலும் காணிக்கைகளாலும் பலிகளாலும் அப்பொழுது. அநேக வருஷசமூகங்களாக ஈஸ்வரரை ஆராதித்தார். இந்தஸமயத்திலேயே தைத்தியர்கள் அதிக பலசாலிகளானார்கள். அவர்கள் தேவர்களை துன்பஞ் செய்தார்கள். தேவர்கள் உமாபதியான மஹேஸ்வரரையடைந்து பக்தியோடு ‘சத்துருக் கூட்டங்களை ஸம்ஹாரம்செய்யும்

(என்றார்கள்). சங்கரர் பார்க்கவராமரை அழைத்து, 'பார்க்கவ! எல்லாத் தேவசத்துருக்களையும் ஸம்ஹாரம்செய்' என்று சொன்னார். பரசுராமர் 'தேவேசரே! யுத்தத்தில் அஸ்தரங்களில் பழக்கமில்லாத எனக்கு அஸ்திரங்களில் தேர்ச்சிபெற்றவர்களும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களுமான தானவர்களனைவரையும்கொல்லுவதற்கு வல்லமையேது? என்றுகூறினார். ஈஸ்வரர், 'என் அநுமதியினால் நீசெல்; சத்துருக்களைச் சம்ஹரிப்பாய்' என்று சொல்லினர்.

இந்த வார்த்தையைக் கேட்டுப் பரசுமார் தானவர்களை நோக்கிச் சென்றார். பிறகு, பார்க்கவராமர் தேவசத்துருக்களை ஜயித்தார். தானவர்களாலே காயம்பண்ணப்பட்ட சரீரத்துடன் கூடின அந்தப் பரசுராமர் ருத்திரரால் தொடப்பட்டவுடனே காயங்கள் நீங்கினவரானார். அவ்விதமான அவருடைய செய்கையினாலே ஷாட்குண்ய பரிபூர்ணரான மஹாதேவர் பிரீதியுள்ளவருமானார்; பார்க்கவருக்குப் பற்பலவிதமான வரன்களையும் கொடுத்தார். சூலபாணியான ஈஸ்வரர், பிருகுநந்தன! உன்னிடத்திலுள்ள மனிதச் செய்கையையும் போக்கிவிட்டேன். இஷ்டப்படி என்னிடத்திலிருந்து திவ்யாஸ்திரங்களைப் பெற்றுக்கொள்' என்று நியமித்தார். பிறகு, மிக்கதவமுள்ள பரசுராமர் எல்லா அஸ்திரங்களையும், மனத்தினால் விரும்பிய பலவிதமான வரன்களையும் பெற்றுச் சிவபிரானை முடியினால் வணங்கித் தேவர்களுக்கெல்லாம் ஈசரான அவரிடத்தினின்று அனுமதிபெற்றுச் சென்றார்.

## உமாஸ்துதி அர்ஜுனன் செய்தது.

ஸ்ரீ உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்யரவர்கள் மொழிபெயர்த்த பீஷ்மபர்வம் 23-வது அத்யாயத் திரட்டு. சென்னை கணேசப் பிரஸிலும், வைஜயந்திப் பிரஸிலும் 1919ம் வருஷத்தில் ஆனபதிப்பு.

கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஜயமுண்டாவதின் பொருட்டு (அவனைப் பார்த்து) "நீ சுசியாகி யுத்தத்திற்கு எதிர்முகமாக இருந்துகொண்டு பகைவர்கள் தோற்பதற்காக துர்க்கா ஸ்தோத்திரத்தைச் சொல்" என்று கூறினார். அர்ஜுனன் ரதத்தினின்று இறங்கிக் கைகளைக் குவித்துக் கொண்டு துர்க்கா தேவியை ஸ்தோத்திரம் செய்யலானான்.

"யோகிகளுடைய கூட்டத்துக்குப் பரமபதத்தை அடைவிக்கிற யோக வித்தியை உண்டுபண்ணுகிறவளே! பிரம்மஸ்வரூபிணி! மந்தரவனத்தில் வஸிப்பவளே! உனக்கு நமஸ்காரம். தவறாத பிரம்மசர்யமுள்ளவளே! காலசக்தியே! ருத்திரருடையபத்தினியே! கபிலையே! கருமையும் பொன்மையும் கலந்த நிறமுடையவளே! பக்தர்களிடத்தில் மங்களத்தைச் சேர்ப்பிக்கின்றவளே! உனக்கு வந்தனம். காலாந்தகனுடைய மனைவியே! தைரியமுள்ளவளே!



(ஸங்கடத்தினின்று பிராணிகளைக்) கரையேற்றுபவளே! ஸர்வ ஸௌபாக்ய லக்ஷணமுள்ளவளே! உனக்கு வந்தனம். காத்யாயனியே! மிகவும் பூஜிக்கத்தக்கவளே! குரூரமானவளே! சிறந்த ஜயத்தைக் கொடுப்பவளே! ஜயஸ்வரூபிணி! மயில் தோகைகளைக் கொடியாகக் கொண்டவளே! பலவித ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளே! மிகக் கொடிய சூலத்தை ஆயுதமாகக் கொண்டவளே! கத்தி கேடகங்களைத் தரித்தவளே! ஸ்ரீ கிருஷ்ணருடைய இளைய சகோதரியே! (எல்லோருக்கும்) மூத்தவளே! மகிஷாஸுரனுடைய ரத்தத்தில் எப்பொழுதும் பிரீதியுள்ளவளே! மஞ்சளாடையைத் தரிப்பவளே! சிறந்த புன்னகையுள்ளவளே! சக்கரம் போல் (வட்டமான) முகமுள்ளவளே! போரில் விருப்பமுள்ளவளே! உனக்கு நமஸ்காரம். உமையே! மஹேஸ்வரஸ்வரூபிணி! வாஸுதேவஸ்வரூபிணி! கைடபனை நாசம் செய்தவளே! மஞ்சள் நிறமுடைய கண்களையுடையவளே! பற்பல ரூபங்களுள்ள கண்களையுடையவளே! அதிகமான தாம்ரவர்ணமுடைய கண்களையுடையவளே! உனக்குநமஸ்காரம். வேதத்தினால்புகழப்பட்டவளே! மகா புண்யஸ்வரூபியாயிருப்பவளே! யாககார்யம் பிராம்மணன்முதலானவர்களுக்கு நன்மை செய்பவளே! அதீதவிஷயங்களை யறிந்தவளே! ஜம்புத்வீபத்தைச் சேர்ந்த ராஜதானிகளிலுள்ள தேவாலயங்களில் நித்யமாக ஸாந்நித்யம் செய்பவளே! வித்தைகளுள் நீ ப்ரம்மவித்தை; பிராணிகளுக்குமகா நித்ரை. ஸுப்ரமண்யருடைய தாயே! பகவதி! துர்க்கையே! காட்டில் வஸிப்பவளே! நீஸ்வாஹாகாரமென்றும் ஸ்வதையென்றும் கலையென்றும், காஷ்டையென்றும், ஸரஸ்வதியென்றும் வேதமாதாவான ஸாவித்ரியென்றும் வேதாந்தத்தில் சொல்லப்படுகிறாய். மகாதேவி! பரிசுத்தமான மனத்தினால் நீஸ்தோத்திரம் பண்ணப்பட்டாய். உனது அனுக்கிரகத்தினாலே போர்க்களத்தில் எப்பொழுதும் எனக்கு ஜயமுண்டாக வேண்டும். காடுகளிலும் பயங்கரமான துர்க்கங்களிலும் பக்தர்களுடைய கிருகங்களிலும் பாதாளத்திலும் நித்யம்வாசம் செய்கிறாய். யுத்தத்தில் அசுரர்களை ஜயிக்கிறாய். நீஜம்பனி; மோஹினி; மாயை; ஹ்ரீ; ஸ்ரீ; காந்தியுள்ள ஸந்தியை; அவ்வாறே மாதாவான ஸாவித்திரி; துஷ்டி; புஷ்டி; தைர்யம்; சந்திரனையும் சூரியனையும்விருத்திபண்ணும்படியான காந்தி; ஐசுவரியமுடையவர்களுடைய ஸம்பத்து; நீயுத்தத்தில் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் பார்க்கப்படுகிறாய்? என்றான். பிறகு, பார்த்தனுடைய பக்தியையறிந்து (துர்க்கா தேவியானவள்) ஆகாயத்தை யடைந்து 'பாண்டவ! சிறிதுகாலத்துக்குள்ளாகவே பகைவர்களை ஜயிப்பாய். நீ நாராயணனை ஸஹாயமாகக் கொண்ட நரனாயிருக்கிறாய். நீ போரில் பகைவர்களால் வெல்லமுடியாதவன்; வஜ்ரதரனான இந்திரனாலும் ஜயிக்கமுடியாதவன்" என்று சொன்னாள்.

## அஸ்வத்தாமா பெற்ற சிவசகாயம்.

ஸ்ரீ உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்யரவர்கள் மொழிபெயர்த்த சௌப்திக பர்வம் 6-வது 7-வது அத்தியாயங்களின் திரட்டு. சென்னை கமர்ஷியல் பிரஸ்; 1923-ம் வருஷப்பதிப்பு.

'இந்த மிகப் பெரிய பூதமானது தெய்வ தண்டம்போல (ஸம்ஹாரத்தில்) முயற்சியுள்ளதாக இருக்கிறது; ஆலோசித்துங்கூட எவ்விதத்தினாலும் இதை நான் அறியவில்லை. அதர்மத்தினால் தூண்டப்பட்ட இந்தக் கலக்கமான எண்ணத்தினுடைய இந்தக் கோரமான பலமானது அநர்த்தத்தைத் தரவல்லதாகிறது; இது நிச்சயம். எனக்கு நேர்ந்திருக்கின்ற அப்படிப்பட்ட இந்த யுத்த நிவிர்த்தியானது தெய்வத்தினாலேயே ஏற்படுத்தப்பட்டது. இச்சமயத்தில் தெய்வபலமின்றி வேறு விதத்தினால் முயல்வதென்பது எவ்விதத்தினாலும் ஸாத்யமன்று. அப்படிப்பட்ட நான் இப்பொழுது பிரபுவான மஹாதேவரைச் சரணம் அடைகிறேன். அவர் எனக்கு நேர்ந்திருக்கிற இந்தக் கோரமான தெய்வதண்டத்தை நாசஞ் செய்வார். நான் ஜடாதாரியும் தேவதேவரும் உமையவளுக்குப் பதியும் கபாலங்களை மாலையாக அணிந்தவரும் ருத்ரரும் பகனுடைய நேத்திரத்தை அபகரித்தவருமான சிவபிரானைச் சரணம் அடைகிறேன். அந்தத் தேவரன்றோ தவத்தினாலும் விக்கிரமத்தினாலும் தேவர்களை அதிக்ரமித்திருக்கிறார்' என்று (அஸ்வத்தாமர்) கூறினார். இவ்வாறு ஆலோசித்து அந்தத் துரோணபுத்திரர் ரதமத்தியிலிருந்து இறங்கிப் பரிசுத்தராக நின்றுகொண்டு தியானம் செய்தார். 'உக்ரஸ்வரூபியும் ஸ்திரமாயிருப்பவரும் மங்களஸ்வரூபியும் அழும்படி செய்கின்றவரும் பிராணிகளை ஹிம்சிப்பவரும் ஈசானரும் ஈசுவரரும் கைலாஸமலையில் வசிப்பவரும் வரங்களைக் கொடுப்பவரும் (ஸம்ஹாரக்ருத்யத்தினால்) விளையாடுபவரும் ஸம்ஸாரத்தை விருத்தி செய்பவரும் அழிவில்லாதவரும் கறுத்தகண்டத்தை யுடையவரும் பிறப்பில்லாதவரும் ரோதனஞ் செய்தவரும் தக்ஷருடைய யாகத்தை அழித்தவரும் (பாபத்தை) அபஹரிப்பவரும் உலகத்தைத் தம் உருவமாகக் கொண்டவரும் பற்பல ரூபமுள்ள கண்களையுடையவரும் அனேக ரூபமுள்ளவரும் உமைக்குப் பதியாயிருப்பவரும் இடுகாட்டில் வஸிப்பவரும் கர்வமுள்ளவரும் பெரிய கணங்களுக்குப் பதியாயிருப்பவரும் பிரபுவும் கட்வாங்கத்தைத் தரித்தவரும் முண்டிதரும் ஜடையுள்ளவரும் பிரம்மசாரியும் திரிபுரத்தை ஸம்ஹரித்தவருமான இந்த ருத்திரரை, அல்பபுத்தியுள்ளவனால் செய்ய முடியாத ஸர்வ பூதோபஹாரத்தினால் (பஞ்ச பூதங்களாலாகிய தம் சரீரத்தையே பலியாகக் கொடுப்பது) இப்பொழுது ஆராதிக்கப் போகிறேன். ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவரும் ஸ்தோத்திரஞ் செய்யத் தக்கவரும் ஸ்தோத்திரஞ் செய்யப்படுகின்றவரும் ஸபலமான தர்ஸனத்



துடன் கூடினவரும் தபஸ்விகளுக்குக் கதியாயிருப்பவரும் குபேரனுக்கு நண்பரும் ஸுப்ரம்மணிருக்குப் பிதாவும் எவரைவிட உத்தம வஸ்து இல்லையோ அப்படிப்பட்ட ஸர்வோத்தம வஸ்துவாயிருப்பவரும் சரண்யருமான ருத்திரரை உத்தமமான ஸமாதியினால் சரணமடைகிறேன். எவ்விதத்தினாலும் தாண்ட முடியாத இந்தக் கோரமான ஆபத்தைஇப்பொழுது நான் தாண்டுவேனாகில் பரிசுத்தமான ஸர்வ பூதோபஹாரத்தினால் பரிசுத்தரான ஈஸ்வரரைப் பூஜிப்பேன்' என்று பிரார்த்தித்தார். அவருடைய முன்னிலையில் ஒரு வேதி தோன்றியது. அந்த வேதியில் அப்பொழுது அக்னி தோன்றிற்று. அது ஜ்வாலைகளால் திக்குகளையும் திக்கோணங்களையும் ஆகாயத்தையும் நிரப்புகிறது போலிருந்தது. அவ்விடத்தில் ஜ்வலிக்கின்ற முகங்களையும் கண்களையுமுடையவைகளும் தோள்வளைகளைத் தரித்தவைகளும் மேலே தூக்கப்பட்டகைகளை யுடையவைகளும் யானை வடிவமுள்ளவைகளும் மலைபோன்றவைகளுமான மகாகணங்கள் தோன்றின. அப்படிப்பட்ட பூதகணங்களைத் துரோண புத்திரர் பார்த்தும் (பயத்தினால்) வருத்தத்தையடையவில்லை. பிறகு, துரோண புத்திரர் வில்லைக் கையில் கொண்டவராகவும் உடும்புத் தோலால் செய்த விரலுறை கட்டிக்கொண்டவராகவும் தாமாகவே தம் மனத்தினால் தம்மைப் பலியாக ஏற்படுத்தினார். மனோதைர்யமுள்ள துரோண புத்திருடைய அந்தக் கர்மாவில் விற்களே ஸமித்துக்களும் கூர்மையுள்ள பாணங்களே பவித்திரங்களும் ஆத்மாவே ஹவிஸுமாக இருந்தன. பிறகு, பிரதாபசாலியும் அதிக கோபமுள்ளவருமான துரோண புத்திரர் ஸோமனைத் தேவதையாகக் கொண்ட மந்திரத்தினால் தம்மைப் பலியாக ஏற்படுத்தினார். ருத்திரரை ஸ்தோத்திரஞ் செய்து கைகளைக் குவித்துக்கொண்டு இவ்வாறு கூறினார். 'பகவானே! அங்கிரஸினுடைய குலத்திலுதித்த இந்த ஆத்மாவை இப்பொழுது நான் நல்ல அக்னியில் ஹோமஞ் செய்கிறேன். என்னைப் பலியாக ஏற்றுக்கொள்ளும். மகாதேவரே! தேவரீரிடத்திலுள்ள பக்தியினால் உத்தமமான ஸமாதியினால்இந்த ஆபத்தில் உம்முடைய ஸந்நிதியில் செய்யத் தொடங்குகிறேன். விபுவே! என்னால் பகைவர்கள் வெல்லக்கூடாதவர்களாகி விட்டால் ஹவிஸாயிருக்கின்ற என்னை ஏற்றுக்கொள்ளும்' என்றார். துரோண புத்திரர் இவ்வாறு சொல்லிவிட்டு ஜ்வலிக்கின்ற அக்னியுடன் கூடின அந்த வேதியின் மீதேறித் தம்முயிரை யிழக்கத்துணிந்து அக்னியில் உட்கார்ந்தார். கைகளை உயரத் தூக்கியவரும் அசைவற்றவரும் ஹவிஸாக அணுகிவந்தவருமான அவரைக் கண்டு, ஷாட்குண்ய பரிபூர்ணரான ஸாக்ஷாத் மஹாதேவர் சிரித்துக்கொண்டு கூறலானார். 'உத்தமமான செய்கைகளையுடைய கிருஷ்ணனால் மெய்மை, தூய்மை, நேர்மை, தவம், நியமம், பொறுமை, பக்தி, தைர்யம், செய்கை, மனம், வாக்கு இவைகளால் உள்ளபடி நான் ஆராதிக்கப்பட்டேன்.

ஆதலால் கிருஷ்ணனைக் காட்டிலும் அதிக இஷ்டமானவன் எனக்கு வேறு ஒருவன் இல்லை. அப்பா! நன்கு மதிப்பைச் செய்கின்றவனும் உன்னை அறிய எண்ணங் கொண்டவனுமான என்னால் எப்பொழுதும் பாஞ்சாலர்கள் காக்கப்பட்டார்கள். பாஞ்சாலர்களை ரக்ஷிக்கின்ற என்னால் அந்தக் கிருஷ்ணனுக்கே நன்மதிப்புச் செய்யப்பட்டது. அவர்களோ காலத்தினால் அவமதிக்கப்பட்டுவிட்டார்கள். இனி அவர்களுக்கு உயிர் இல்லை என்றார். பகவான் இவ்வாறு சொல்லிவிட்டுத் தம்முடைய சரீரமாக இருக்கிற மஹாத்மாவான அஸ்வத்தாமாவினிடம் ஆவேசித்தார். அவருக்கு மாசற்றதாயும் உத்தமமாயுமிருக்கிற ஒரு கத்தியையும் கொடுத்தார். பிறகு, பகவானால் அனுப்பிரவேசிக்கப்பட்ட அஸ்வத்தாமா மீண்டும் தேஜஸினால் ஜ்வலித்தார்; யுத்தத்தில் வேகமுள்ளவருமானார். அந்தத் துரோண புத்திரரை ஸாக்ஷாத் ஈவரரைப் போலக்கண்டு அந்தப் பூதங்களும் ராக்ஷஸர்களும் ஓடிவிட்டனர்.

—— தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார்.

## திருவள்ளுவர் திருநாட் கழக அறிக்கை.

நந்தண்டமிழ் நாட்டிற் பண்டைக் காலத்தில், ஞாயிறையுந் திங்களையும் மாமழையையும் போற்றி வந்ததுபோல் புலவர்களையும் போற்றிவருதல் பெருவழக்காயிருந்தது. மலரவன்செய் வெற்றுடம்பு மாய்ந்துபோவதானும், வண்டமிழோர் பாவுடம்பு மாயாது புகழ்கொண்டு நின்று நிலவுவதானும் 'மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்' என்று மதிப்பிட்டுக் கூறிய பெருமை தமிழ்நாட்டிற்கே உரித்தாம். அத்தகைய அரும்பெறற் புலவர்தம் நினைவு மறவாது மக்கள் உள்ளத்தே என்றும் நின்று நிலவச்செய்தல் நாட்டுத் தொண்டுகளில் ஒன்றாகும் என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும். நானிலம் போற்றும் நாடகப் புலவரான ஷேக்ஸ்பியர் என்பார்தம் திருநாளை, அது கொண்டன்றோ, ஆங்கிலேயர் ஆங்காங்குச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்! அவ்வாறே ஏனைய நாட்டினரும் தத்தம் நாட்டுப் பெரும்புலவர் நாட்களை விழா ஆதுகொண்டாடுகின்றனரல்லரோ? அற்றாக, உலகப் புலவர்களின் நடுநாயக மாமணியாயும், ஒழுக்கத்திற்கு உறையுளாயும் தமிழ்மொழிக்குஉயிர்நிலையாயும் இலகும்திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவது தமிழரின் கடமையன்றோ? இதுகருதி இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் வள்ளுவர்தந் திருநாளாய வைகாசி அனுடத்தன்று வள்ளுவர்விழாக் கொண்டாடுதற்கான முறைகளைத் தேர்ந்து அமைப்பதற்காகவே இக்கழகம் கூட்டப்பட்டது. தமிழ்நாட்டிற்கும், தமிழ்மக்கட்கும், தமிழ்மொழிக்கும் இயன்றவரையில் எத்துறையிலும் பணியாற்றி வருவதே இக்கழகத்தின் பொதுநோக்கமாயினும், இதன் சிறப்பான நோக்கங்கள் பின்வருவனவாம்:—



### இக்கழகத்தின் நோக்கங்கள்.

1. பொதுமறையாகிய திருக்குறளைப் பயந்த திருவள்ளுவரின் திருநாளை ஆண்டுதோறும் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடச் செய்தல்.

2. திருவள்ளுவர் திருநாளன்று ஆங்காங்கு ஏழைகளுக்கு உணவளிப்பதற்கான முறைகளைத் தேடி அமைத்தல்.

3. திருவள்ளுவர் பெயரால் ஒரு "நினைவு மலர்" அச்சிட்டு, திருநாளன்று அடக்க விலைக்குத் தருதல்.

4. இந்தியாவிலுள்ள திருந்திய மொழிகளில் எந்தெந்த மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் படாதிருக்கின்றதெனத் தெரிகிறதோ அந்தந்த மொழிகளில் மொழிபெயர்க்கச் செய்தல்.

5. சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்மொழியில் முதன்மையாகத் தேர்வுபெறும் மாணவர்களுக்கு நூல்கள், பதக்கங்கள் முதலிய பரிசுகளை யளித்தல்.

6. திருவள்ளுவர் பண்டசாலை யொன்று சென்னை நகரிலே நிறுவுதற்கான முறைகளைத் தேடியமைத்தல்.

7. எத்திறத்தார்க்கும் பொதுவாகப் பயன்படுமாறு தலைநகராகிய சென்னையின்கண் ஒரு மன்றம் அமைத்தல்.

8. ஒரு பொது நூல்நிலையத்தை மன்றத்தி லமைத்தல்.

9. மன்றத்தின் நடுவே தெய்வப் புலவர் திருவள்ளுவரின் உருவச்சிலை யொன்றைப் பளிங்கினாற் செய்து நிறுத்துதல்.

மேற்கண்ட இந் நோக்கங்கள் எளிமையாகவும், இனிமையாகவும் நிறைவேறுதற் பொருட்டு இக்கழகத்தினுக்குப் பெருந்தொகையினரான உறுப்பினர்களை நாடெங்கும் சேர்த்தல் கட்டாயமாகும். சாதி, சமய வேற்றுமையின்றி எல்லாரும் இக் கழகத்திற்கு உறுப்பினராகுந் தகுதியுடையவராவர். ஆண்டுக்குக் கட்டணம் 4 அணா செலுத்துவோர் இக் கழகத்தின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்படுவர். ரூ 5. கொடுப்பவர் இதற்கு வாழ்நாள் உறுப்பினராவர். ரூ 10-ம், அதற்கு மேலுங் கொடுப்பவர் காப்பாளர் (Patron) ஆவர்.

இவ்வாண்டு வள்ளுவர் விழா யுவ௵ வைகாசி௴ ௫-ம் நாள் (18-5-1835) நடைபெறும்.

இங்ஙனம்,

கா. நமச்சிவாய முதலியார், தலைவர்.

பா. கண்ணப்ப முதலியார். அமைச்சர்.

உ

# ஆலய வரையறை.

(போத்தனூர் வழி, கிணத்துக் கடவு
சிவஸ்ரீ K. P. சுப்பிரமணிய சிவாசாரியாரவர்கள்.)

பெருங்கருணைத் தடங்கடலாம் நமது அண்ணல் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களின்கண் இன்னின்னசாதியர் இன்னின்ன இடம்வரைவரலாமென நன்குபகுக்கப்பட்டுள வாயினும் அவ்வச்சாதிப்பெயர்கள் தற்கால அனுபவத்தின் கண் நிகழுவன போலல்லாது பல வேறுபாடுடைய பெயர்களைக்கொண்டு கூறியிருக்கின்றது. சில சாதிப்பெயர்கள் மட்டும் தற்காலம் வழங்குவனபோற் காணப்படுகிறது. பிராமணர் முதல்சர்மஜீவியிறுதியாக அறுபத்தெட்டு வகைமரபினர்களை வகுத்து இவர்களை இரண்டாவது மண்டபமாகிய அர்த்தமண்டப முதல் ஐந்தாவது பிராகாரத்திருக் கோபுரவழிவரை அவ்வச்சாதியர்க்குரிய இடங்களை நன்கு உணர்த்தி யிருக்கிறது. இதில் பிராமணர் முதல் சூத்திரர்வரை உள்ள நான்கு வகுப்பினரைத்தவிர மற்ற அறுபத்துநான்கு வகுப்பினர்களையும் கலப்புத்தோன்றல்களாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இவற்றிற்குப்பலவேறு பிரமாணங்கள்கொண்டு வாதிப்போர்க்கு நான் யாதொருபதிலும் சொல்ல வல்லேனல்லேன். மேற்கூறிய சாதியர்களை நிச்சயிக்குமிடத்து அவரவர்களின் தொழில்களும் ஜீவனங்களும் ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகொண்டே தற்காலம் உள்ளசாதியர்களை நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. அவற்றினும் தொழில் நிலைதவறினிற்கு மிக்காலத்துத் திரப்படுத்துவது மோர்திரமேயாகும். புளிந்தனென்னும் ஒருவகைச்சாதியர் எண்ணெய்புண்ணாக்குமுதலியன வியாபாரம் செய்பவரெனவும் இவர்களைநித்திய சூதகரெனவும்இவர்கள் அபரான்னகாலத்தில்கிராமத்திற்கு வெளியே ஒரு தண்டத்திற்கு அப்புரம் இருக்கவேண்டுமெனவும் இவர்கள் வீட்டில் தாழ்ந்த சாதியரும் புசித்தலும் இவர்களைத் தொடுதலும் கூடாதெனவும் கூறியிருக்கின்றது. இவர்களையே வாணியராக நிச்சயித்து வேதாரண்யம்முதலிய தலங்களில் விலக்க அறிவிப்புச் செய்திருக்கலாமென மந்தமதியேனது புலன். வேறு பலதலங்களின் அனுபவங்களைப்பற்றி விசாரித்துவெளியிடவிருப்பம்.

நம் பெருமான் சன்னிதானத்தின்கண் திருத்தொண்டு முதலியன செய்வதற்குக்கீழே குறித்துள்ளவர்களேஆவர். நித்தியபூஜைசெய்தல் செய்வித்தல் நைமித்திகம் காம்யம் என்பவைகளைச்செய்தல் செய்வித்தல் நித்தியபூஜையில் அபிடேகத்திற்கு தீர்த்தம் சேகரித்தல் பூஜோபகரண சாதனங்களைச் சேகரித்தல் சமையல் செய்தல்முதலிய கார்யங்களுக்கு சிவத்விஜர்களையும் மற்றும் திருவலகிடுதல் திருமெழுக்கிடுதல் திருக்கோலங்களால்அலங்கரித்தல்புஷ்பங்கட்டுதல்திருத்தம்புரிதல்தீபம்ஏற்றுதல்தீவர்த்திபிடித்தல் முதலான கார்யங்களுக்கு உருத்ரகண்ணிகை ருத்ரகன்னிகை



ருத்ரதாசி பட்டாரகர் பட்டுகர் கௌசம்பகர் தீபவத்ஸலர் ஆலயபாலகர் நடர் விடர் காயகர் என்பன வாதிய இவர்களையும் உரியவரெனவும் அவரவர்க்குரிய சிவதீக்கை பெற்றே செய்தல் வேண்டுமெனவும் ஆகமத்திற் கூறியிருக்கிறது. தற்காலம் அங்ஙனம் நடைபெறுவது அசாத்தியமான காரியமேயாகும். ஆலய அதிகாரிகள் ஆகம விதி விலக்கு சித்தாந்தங்களைக் கவனியாதுஇருப்பதேஅதற்குக்காரணமாகும். முற்காலத்தில் சோழராஜன் முதலானோர் ஆகம விதி விலக்குகளை நன்குணர்ந்தே ஆலய பரிபாலனம் செய்தன ரென்பதை, பெரிய புராணம்:—

"பொங்குமா மறைபுற் றிடங் கொண்டவர்
எங்கு மாகி யிருந்த வர்பூசனைக்
கங்கண் வேண்டுநி பந்தமாராய்ந் துளான்
தங்க வாகமம் சொன்ன முறைமையால்".

எனக் கூறுவதுகொண்டு தெளியலாம். சிவநேசச் செல்வர்களும், ஆலய அதிகாரிகளும் ஆகம பரிசீலனங்களைச் செய்து சிவாலயத் திருத் தொண்டு புரிந்து இகபர சாதனங்களை அடையவேண்டுமெனச் சிந்திப்போமாக.

கர்ப்பக் கிரகம் முதல் விருஷப மண்டபம்வரை சிவத்விஜர் முதல் சத்சூத்திரர்வரைவிதித்துள்ள இடங்களிலும் ஸவர்ணன், ரிக்ஷஜீவி, குலாலன், அம்பட்டன், பாரசைவன், நிஷாதன், பரிசான், மற்றொருவகை அம்பட்டன், க்ஷமைஜீவி, கோமுட்டி, சங்கிகாயன், ஆஸ்விகன், ரூபகன், மணிகாரன், உக்ரன், கடகாரன், நடன், மாளவன் என்னும் 18 வகைச் சாதியர்கள் கர்ப்பாவரண பிராகாரத்திலும் தக்ஷா - சூதன் - கர்மகாரன் இம்மூவகையினர் இரண்டாவது பிராகாரத்திலும் சக்ரி, பைரவன், குஹன், ஓஷ்டாரகன், வேணுகன், கரணன் இவ்வாறு வகையினர் மூன்றாவது பிராகாரத்திலும் பகலப்தன், நாவிதன், சமூசி, கன்னன், ரஜகன், ஸ்வச்பசன், குஹன், கோமுட்டி இவ்வெட்டு வகையினர் நான்காவது பிராகாரத்திலும் சண்டாளர், துஷ்யந்தன், க்ஷத்தா, மாகதன், புளிந்தன், வைதேகன், பாலகன், நிர்த்தகன், நாவிதன், சுனிஷாதன், ஆஸ்ரகன், குறண்டகன், கனகன், மல்லன், விச்சிலன், கரணன், திரவிணன், அதத்தன், ஆர்யஸ்மிக்யன், மைத்ரேயன், சூதன், தஸ்யு, மாவாகரன், நீலகாரி, நீலவிக்ரமீ, சர்மஜீவி ஆகியவர்கள் ஐந்தாவது பிராகாரத்திலும்நின்று தரிசிக்கத்தக்கவரும் மிலேச்சர், பாஷண்டர், நாஸ்திகர், வேதபாஹ்யர் இவர்கள் தன்ளுபடி செய்யப்பட்டவரும் ஆவர். ஐந்து பிராகாரங்கள் உள்ள ஆலயத்தில் இப்படி நியமம். நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று முதலான பிராகாரமுள்ள இடங்களில் வெளித்துவஜஸ்தம்பம் வரை எல்லோரும் வரலாம். இதுவே கிரமம். இதிற் கூறிய பிரமாணங்கள் யாவும் ஸத்யோஜாத சிவாசாரியரால் இயற்றப்பட்ட காமிகாகமம் ஆச்சார்யலக்ஷணப்படலத்தில் கூறியிருக்கின்றன. 1916வருஷத்தில் அச்சிட்ட பிரதி ஒன்று தவிர வேறு எவ்வித ஓலைப்பிரதியோ இதர சாஸ்திரங்களோ காண்பிக்க இயலாது. வேறே யாரிடத்திலும் ஏதாவது இருக்கலாம் மற்றவை விரிவஞ்சி விடுத்தோம்.

உ

# சொல்வன்மை.

(வித்வான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை யவர்கள், சிதம்பரம்.)

1. சொல் என்பது நெல், புகழ், மொழி, நாமகள், முதலிய பல பொருள்களைக் குறிப்பதாயினும், மொழி என்னும் பொருளை யுணர்த்தும். சொல் நிற்க, வன்மை யென்னும் பண்பைக்கொண்டு முடிந்த ஓர் சொற்றொடராகும். ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல் பல்லோரறியுஞ் சொல் ஒன்றறி சொல் பலவறி சொல் தன்மைச் சொல் எனவும், பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல், வட சொல் எனவும் சொல் பலவேறு வகைப்படுமாதலின் எல்லாச் சொல்லும் அடங்கவே யாம் சொல் என ஈண்டு எடுத்துக்கொண்டோம். வன்மை என்பது வலிமை எனப் பொருள்படும். ஈண்டு வன்மை யென்பது, கேட்போர் மனதின் கண்ணே தாம் கூறிய ஒழுக்க நூற் கொள்கைகள் பசுமரத் தறைந்த ஆணிபோல் வலியுறும்படி விளங்கக் கூறுதலாம். ஆதலின் ஒவ்வொருவரும் தாம் கற்ற பலநூல்களிலுள்ள உண்மைக் கருத்தையும் உலக நடையும் பற்றிக்கேட்போர் தகுதிக்கேற்றவாறு விளங்க வலியுறுத்திக் கூறுவதே சொல்வன்மையாகும்.

2. இதனைக் கைக்கொண்ட ஒருவர்க்கு உயிர்க்குத் துன்பம் பயக்கும் பசிப் பிணியை நீக்குதற்குரிய பொருளையும் கொடுப்பதுடன், எந்நாட்டாரும் இச் சொல்வன்மையுடையானை எந்நோற்றார் கொல்லோ எனக் கூறும் தகுதியுடையதாயும், செம்மை அறத்தையும், உண்மை இன்பத்தை இம்மையிலும், மறுமையில் அழிவில்வீட்டையும் அடைவதற்குக் கருவியாயு மிருத்தலானும், கடல்போற்கல்விகற்றாராயினும், சொல்வன்மை யுடையாரே மதிக்கப்படுவர். அஃதில்லார் மதிக்கப்படார். என்பதை குமரகுருபர சுவாமிகள் "சொல்வன்மையின் றெனின் என்னாம்" எனக் கூறுதலானும், மக்களாய்ப் பிறந்த அனைவர்கட்கும் சொல்வன்மை ஆவசியம் வேண்டற்பால தென்பது தெற்றெனத் தெளியக் கிடக்கிறது.

3. மக்கள் மாசிலராகிய இளமைப் பவருவத்திலே சொல் வன்மை உண்டாவதற்கு உறுதுணையாய் நிற்கும் உள்ளக் கிளர்ச்சியாகிய பொன் மரம் செழிப்புற்று வளரும்பொழுது ஊழ், பொருளின்மை, சோம்பல் முதலிய நெருப்புக்கள் இடையிடையே பற்றப்படுங்கால் அறிவு என்னும் ஆறானது அந்நெருப்பை அவித்து உள்ளக் கிளர்ச்சியாகிய பொன் மரத்தை



வளரச் செய்யும். அவ்வறிவுஉண்டாவதற்குச் சிறுபிராயத்திலேயே சீரிய கல்வித் துறையிற் சென்று கசடறக் கற்று நூலொடு பழகிய நுண்ணறிவுடையோரது அவையின்கண் அல்லும் பகலும் அமைந்து ஒழுகினால் நல்லறிவு உண்டாகும். இவ்வறிவு உள்ளக்கிளர்ச்சி யென்னும் உயர் பொன்மரத்திற்கு உறுதுணையாய் நிற்பதினால் வேண்டிய பொருளைத்தரும் சொல்வன்மை யுடையாரென்னும் சொல்லாகிய பொற்பூவைப்பூக்கும்.

4. இச் சொல்வன்மையுடையார், தாம் கற்ற நூல்களிலுள்ள உண்மைக் கருத்துக்களைப் பல்லோரும், பலநாள் கற்றறியவேண்டிய விஷயங்களைச் சில நிமிஷங்களில் உணர்த்துகின்றார்கள். அதினாற் பல்லோரும் தேனை உண்ணுவதற்கு வண்டுவந்து மொய்ப்பதைப்போல் இவருடன் உழுவலன்புகொண்டு தம் விழுமம் துடைத்து வாழ்வதுடன் அப் பூவிரியப் புதுமணம் புறப்படல்போல் புகழ் இவரிடமிருந்து தோற்றி எங்கும் நிலவுதலினால் இச்சொல்வன்மையுடையார்க்கு இம்மையிற் புகழ் பொருளும் மறுமையில் வீடும் பயத்தற்கு ஏதுவாகிய சொல்வன்மையைத் தவிர வேறு எவ்வித துறையும் வேண்டுவதில்லையென்பதுவிளங்கக்கிடக்கிறது. அவர்கள் அடைவது உயிர்க்குறுதி பயக்கும் புகழ்மாத்திரமா? அதினாலடைந்த பெருகிய பொருளைக்கொண்டு பசிப்பிணி நீக்குதற்குரிய உண்டிச் சாலைகளையும் கல்விக்கூடங்களையும் நாடோறுமியற்றி உண்மையின்பத்தை யிம்மையிலனுபவித்தலன்றி மறுமையில் மக்கட்பிறவிக்கேதுவாகிய கட்டின்நீங்கி என்றும் அழிவிலின்பத்தையே அடைவாரெனின் இச் சொல்வன்மை யுடையாரது பயனே போற்றத்தகுந்தது என்பது வெள்ளிடை மலையாகும்.

5. விவேகானந்த சுவாமிகளவர்கள் தம் உள்ளத்தமைந்த கருத்துக்களை ஆங்கிலநாட்டிற்போய் நிறுத்தியதும், புத்தர் எச் சமயத்தாரையும் பௌத்த சமயமாகும்படிச் செய்ததும் எல்லாம் சொல்வன்மையினாலன்றோ? ஆதலின், நம்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் இச் சொல்வன்மையை மேற்கொண்டொழுகுவாராயின் நம் நாடு எந்நாட்டினும் சிறந்ததாகப் போற்றப்படும் என்பதில் சிறிதும் ஐயமின்று.

### முடிவுரை

இதுகாறும் கூறிய வாற்றால், சொல் வன்மை யுடையாரேதாம் கற்ற அரிய பெரிய நூல்களிலுள்ள உண்மைக் கருத்துக்களைப் பிறர்க்கு அறிவுறுத்துவாரென்பதும், அவர்களே இம்மையில் புகழ்பூசையும், மறுமையில்வீடுமடைவாரென்பதும், அவர்கள் கருத்தையேஎந்நாட்டாரும் போற்றி ஏற்றுக்கொள்வர் என்பதும் ஒரு வாறுதெளியக்கிடக்கிறது.

உ

# முத்திநாதன்.

(திருவல்லிக்கேணி வேதாகமோக்த சைவ சித்தாந்த சபைத்தலைவர்
திரு. நல். கண்ணப்ப முதலியாரவர்கள்)

சிவபெருமானை முத்திநாதன் என்று வேதங்கள் கூறுவது அவரைக் காட்டிலு மதனை யுயிர்களுக்குத் தரவல்லவர் வேறு யாருமில்லாமையால். அச் சிவபெருமான் எண்ணிறந்த கற்பங்களைக் கடந்து விளங்கு மிதுகாறும் எத்தனை பேர்க்கு முத்தி கொடுத்தருளினர்? நூல்களின் வழி விசாரிக்கின், இத்தனைபேர் என்று கணக்கிலகப்படத் தடையில்லை. அற்பத் தொகையிலளவிடத் தக்க சிலரை முத்தியில் விட்டது கொண்டே அவருக்கு முத்திநாதன் என்னும் பேர் சிறவாது. ஆகலின், வேதம் அவ்வாறு கூறியது உபசாரமோ வெனின் அற்றன்று. அவர் திருஞானசம்பந்தராகத் திருவவதாரஞ் செய்து.

"காழியிலே வந்து கணக்கிலாச் சீவரைநீ
டூழியின்பத் துய்த்த வொருவனே"

என்று மேலோர் கூறியபடி யெண்ணிறந்த வுயிர்களுக்கு முத்தியைக் கொடுத்தருளினராகலின் அவர் முத்திநாதன் என்பது சத்தியமே. மோக்ஷகர்த்ருத்வமாகியவத்தலைமைத்தன்மைதிருஞான சம்பந்தரிடத்தில் பரிவஸாக முறலால், பரசிவப் பொருளும் ஞான சம்பந்தரும் ஒரே பொருளென்றறிந்து அவிரோதத்தைத் தெளிந்தின்புறுவார்களாக.

"கட்டை முட்டமுவுதா ணெட்டிதழுடுத்த செங்கமல
நான்முகவெ கினமுங்
கவுத்துவ மணிப்பணியொ டம்பேரு காடவி
கலித்த பச்சைப்பன்றியு
மட்டுலவு சீர்பாத மின்றளவு கண்டிலா
வானவனு மோரொரு வரை
வழிவருஞ் சரிதாதி வருவித்து வீடுதரும்
வனைதனைக் காழிமேவி
யெட்டுணையு மறிவரு பனந்த சீவரை
வதுவையென்று பெயரிட்டழைத்தங்
கிரும்புண்ட நீரிற் றிரும்பாத வீடுதரு
மினிய கவுணியர் விளக்கே"

என்னு மான்றோர் கருத்து காழிப் பெருந்தகையினது கடவுட்டன்மையை நிலைபெறச் செய்தமை காண்க. இந்தப் பாடலில் குண மூர்த்திகள் மூவரையும், துரிய மூர்த்தியையுஞ்சொல்லி, நாலாவதாகிய அத்துரியப் பொருள் திருஞானசம்பந்தப் பெருமானே



யென்று சாதித்தருளினர். அன்றியும் Oriental historical manuscripts in the Tamil Languaje translated with annotations by William Taylor Missionary என்று பதித்துள்ள ஓர் நூலில் இரண்டாவது புத்தகத்தில், When the king was suffering greatly from the disorder, the God Subramaniam assumed the form of Sambanda Murthi, who came with a sacred Cortege; and a seuere discussion took place between Sambandar and the Samaner & c. என்று அந்த நூலாசிரியராகிய பாதிரியார் எங்கள் ஞானசம்பந்தன் புகழை விளக்கியிருக்கிறார். விரிக்கிற் பெருகும்.

## மாஹேஸ்வர பூஜை மகிமை.

"வைதிகப்பிராமணர் ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலமும், சமய தீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானம் செய்த பலமும் ஒக்கும். வைதிகப் பிராமணர் பதினாயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலனிலும் விசேஷ தீக்ஷிதர் ஒருவருக்கு அன்னமளித்தலினால் வரும் பலன் விசேடம். வைதிகப் பிராமணர் லக்ஷம் பேருக்கு அன்னதானம் செய்த பலமும் நிருவாண தீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானம் செய்த பலமும் ஒன்றே. வைதிகப் பிராமணர் கோடி பேருக்கு அன்னதானம் செய்த பலமும் சைவாசாரியர் ஒருவருக்கு அன்னதானம் செய்த பலமும் சமம். வேதாந்த மகா வாக்கியத்தை அறிந்த கோடி வைதிகப்பிராமண சந்நியாசிகள் கூடினும் நிருவாண தீக்ஷை பெற்றுக்கொண்டு சைவசித்தாந்த நூல்களாகிய சிவஞானபோத முதலிய நூல்களை ஓதி, பதி—பசு—பாசமென்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தையறிந்த சைவரொருவருக்கு இணையாகார்." இது சத்தியம்! சத்தியம்!! முக்காலுஞ் சத்தியமே!!!

## நகைச் சுவை.

இற்றைக்குச் சுமார் முப்பது வருடங்கட்கு முன்னர் இந்து ஜன பூஷணிப் பத்திராதிபர், திருமயிலை வி. சுந்தரமுதலியார் என்னும் பெரியார் தன் நண்பர் சென்னை முத்தியாலுப்பேட்டை லிங்க செட்டி வீதியில் சொந்தமாளிகையில் உடல்நலனின்றி நோய்வாய்ப்பட்டிருந்த சென்னை முனிசிபல் கமிஷனர் திருவாளர் சோமசுந்தரச் செட்டியாரவர்களைப் பார்க்கச் சென்றிருந்தபோது செட்டியாரவர்கள் முதலியாரவர்களை 'யார்', என்று கேட்டதற்கு முதலியார் சோமனை நீக்கினால் தெரியுமென்று பதிலளித்தார். இருபெருஞ் செல்வர்களும் அறிவாளிகளானபடியால் (சோமன் - சுந்தரம்) சுந்தர முதலியார் தன்னைப் பார்க்க வந்திருப்பதாகத் தெரிந்தளவளாவினர்.

——

உ

# முருகவேளும் ஔவைமூதாட்டியும்.

(கண்டாச்சிபுரம், திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்)

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே" (பாரதியார்)

என்று நம் புலவர் பெருமக்களால் புகழ்ந்தோதப்பெறும் பெருமையினை வாய்ந்த நந்தமிழகத்துள் ஔவையார் பெயரை அறியாதார் யாவர்? நெடுங்கணக்குக் கற்ற பிள்ளைகள், உடனே ஓதப் புகுவது ஆத்தி சூடியன்றோ! "ஆத்தி சூடியும், கொன்றை வேந்தனும், வாக்குண்டாமும், நல்வழியும், ஔவையார் வாக்கென்பது உலகப் பிரசித்தம். இவர் வரலாறு முழுதும் அநேகமாய் நந்தமிழ் மக்களுக்குத் தெரியும். இவர் தெய்வப் புலமை மிக்குக் கவிபாடுவதில் நிரம்பவும் சாமர்த்தியம் வாய்ந்தவர். இளஞ்சிறார்களின் கல்வியபிவிருத்தியின் பொருட்டு, மேற் கூறிய நீதி நூல்களை இவர் கல்வித் திறனைக் காட்டுவதாகும். லோகோபகாரமாய் இவர் இயற்றிய நூல்களும்செய்யுள்களும் அனந்தம். கணபதிபூசையைக்கடைப்பிடித் தொழுகும் நெறியினையுடைய இவரைக் கற்றுணர்ந்தோர் கலைமகளம்சமென்பர். தமிழ் நாட்டு மூவேந்தர்களும் இவர் புலமையை மெச்சி நட்புக் கொண்டிருந்தனர். கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய பெரும் புலவர் கூட்டங்களுங்கூட, இவரைக் கண்ட வளவில் உள் நடுக்கங் கொள்வர். நகைச் சுவை பொருந்தச் சமயோசிதமாயும் சாமர்த்தியமாயும் தெய்வீகக் கவிபாடுவதில் இவரை வெல்வார் அக்காலத்தி லொருவரு மிலர். எனவே, இவரைக் "கல்விச் செருக்கு" என்னுங் காட்டானை பிடித்தது. இதனாலகங்கார மேலிட்ட இவர், புலவர் கூட்டங்களை வெறுத்து, ஒரு சமயம் காட்டு மார்க்கமாய்த் தனி வருவாராயினர்.

இதனை யோர்ந்த நஞ்செந்தமிழ்ப் பரமாசாரிய மூர்த்தியாகிய, அறுமுகப் பெருமான் அவ்வம்மையாரின் அகங்காரத்தை யொழித்தல் காரணமாக ஓர் லீலா விநோதமாய் ஔவையார் வருகிற வழியில், தமது திருவுருக் கரந்து எருமை மேய்க்குமோர் ஆயச் சிறுவன் வடிவேற்று, சிறு கந்தை யுடுத்திக் கையிற்பிடித்த கோலுடன், சில எருமைகளை மடக்கிக் கொண்டு, தளிர்த்துப் பூத்துப் பருத்துக் காய்த்தவோர் நாவல் மரத்தின் மீதேறிப் பழம் பறித்துத் தின்பவர் போல் நடித்துக் கிளையின் மீதமர்ந்திருந்தனர்.



பசியினாலும், வெயிலில் வழிநடந்த இளைப்பினாலும், வாட்டமுற்று நின்ற ஔவையார், அம்மரத்தினடியில் சற்றே உட்கார்ந்து, வடிவேற் பெருமானாகிய அம்மாட்டுக்காரப் பையனை நோக்கி, அடா தம்பி!

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்".

என்றபடி பசி யென்னும் பிணி என்னை வருத்துவதால், அது தணியுமாறு எனக்கு நாவற் பழங்கள் பறித்துப் போடுவாயாக என்றனர். சங்கத் தமிழின் தலைமைப் புலவராகிய பெருமான், "ஏ! கிழவி! நிற்குச் சுடும் பழம் வேண்டுமோ? சுடாப் பழம் வேண்டுமோ? என்றனர்." ஔவையார் மிகவும் ஆச்சரியங் கொண்டு நாவற் கனிகளில் சுடுபழமும் உளதோ என்னுஞ் சந்தேகசித்தராய், சிறிது ஆலோசித்து ஒன்றுந் தோன்றாமல் அப்பா! சுடாத பழங்களை போடுவாயாக" என்றனர். பெருமானாகிய சிறுவன் மரக்கிளைகளைக் கையாற் பற்றி அலைத்தான். கனிந்த பழங்களும் கனியாத பழங்களும் உதிர்ந்தன. ஔவையார், நன்கு கனிந்த பழங்களிற் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து, அவைகளில், தரையிலிருந்த மணல் ஒட்டிக்கொண்டிருந்தமையால், அம்மணல் நீங்குமாறு தமது வாயினாலூதினர். ஆறுமுகக் குமரன், "கிழவியே! சுடாதபழம் கேட்ட நீ, சுடுகின்ற பழத்தைத் தின்னப் போகின்றனையே! வாய் வெந்துவிடாதோ? நன்றாக ஊதி ஆறிய பின், புசிப்பாயாக!" என்று கை கொட்டி நகைத்துப் பரிகசித்தனர். ஔவையார் சுடாத பழம் காயென்றும், சுடுகின்ற பழம் முதிர்ந்த கனியென்றும் தெரிந்தவராகிப் பெரிதும் நாணமுற்று, இப்பொருள் தனக்கு முன்னமே தெரியாமற் போனமைக்காக மிகவும் வருந்தி "அந்தோ! இச் சிறுவன் என்னை ஏய்த்துவிட்டானே. அறிவின் முதிர்ந்திணையிலாச் சிறந்த நுண்ணறிவுடைப் பண்டிதை யென்றல்லவோ யெண்ணி இறுமாந்திருந்தேன். சிற்றுளியால் பெரிய மலையுந் தகர்ந்தொழிதல் கண்கூடன்றோ? அகன்ற பெரிய கடலும் கலசயோனியாகிய குறுமுனியின் கையால் உழுந்தளவாய் எடுத்துப் பருகப்பட்டதன்றோ! அறிவு யாரிடத் தடங்கிற் றம்ம! அறிவுக்கு மவதியுண்டோ!! இதுகாறு மெவராலும் வெல்லப்படாமல், எத்துணை கூரிய மதிகொண்ட நல்லிசைப்புலவர்களையெல்லாம் வென்று சிறந்து விளங்கிய வென்னை, வெட்கச் செய்து, இற்றை ஞான்றோர் மாட்டிடைப்பையன் வெற்றிகொண்டு மேன்மையுற்றனனன்றோ!" என்று கூறி,

"கருங்காலிக் கட்டைக்கு வாய்நாணக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்குவாய் நாணும்—பெருங்கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற
தீரவுந் துஞ்சாதென் கண்"

என்னும் வெண்பாவைப்பாடித் துக்கத்துளாழ்ந்தனர். பாவலர் சரித்திர தீபகமுடையார் இச்சந்தர்ப்பத்தை நினைவுகூர்ந்து தான் ஔவையார், கல்விச் செருக்கு ஆகாது என்னுங் கருத்தமைந்த,

"கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்றகலை மடந்தை ஓதுகிறாள்—மெத்த
வெறும் பந்தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்"

என்னும் வெண்பாவை யுரைத்தனர் என்பர்.

ஔவைப் பிராட்டியின் அருந்துயர் கண்ட நமது கருணைத் தடங்கடலாகிய சண்முகப் பெருமான், முதியாய்!

"நுண்ண றிவுடையராய் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பதுபெரும் பேதைமைத்தே"

என்பதறிந்திலாயோ! "பேதைமை யென்பது மாதர்க் கணிகல னன்றோ! ஆகலின் வருத்த மடையற்க" என்று கூறி மூழுமதி யன்ன வாறுமுகங்களும், முந்நான்காகும், விழிகளிரு ளுநேர் வேலும், வேறுளபடையின் சிறந்தோன்றத் தமதுசுயவடிவத்துடன் காட்சி கொடுத்தருளினர். இவ் வற்புதத் திருக்கோலத்தைக் கண்ட ஔவையார், தம்மை மறந்து ஆனந்த பரவச வெள்ளத்து ளாழ்ந்து, "எங்கள் செந்தமிழ்த் துரையோ! இச்சிறியேனை யாட்கொள்ள இத் திவ்விய திருக்கோலங் கொண்டது! என்னே என் தவம்!! "என்று பலவாறு துதித்துப் பணிந்து போற்றி நின்றனர். அதற்குக் கற்ற வர் விழுங்குங் கற்பகக் கனியாம் வெற்றிவேற் பெருமான் மகிழ்ந்து "பண்டிதையே! கவலற்க! நின்னுடன் யாமோர் கலாவினோதஞ் செய்வான் கருதி வந்தனம். நின்னை இகழுதல் கருத்தன்று. ஆத லின் இவ்வுலகில், இனியவை யாது உரைத்தி என்றருளினர். ஔவையார்,

"இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது யேகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்த



லதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே"

என்று விடைப் பகர்ந்தனர். அதற்குச் செவிசாய்த்த பெரு மானுர் "தமிழ்க்கலை வல்லாய்! நன்று நன்று. இனியவை கூறினை; கொடியனவற்றையுங் கூறுக என்றனர். அதற்குத் தாமாக,

"கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
யதனினுங் கொடிது ஆற்றொணுக் கொடுநோ
யதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிதிங் கறையின்
இன்புற வவள்கையி லுண்பது தானே"

என்றனர். அதனைற் பெரிது முவகையுற்ற புள்ளி மயிலே றும் வள்ளி மணாளன் மீண்டும் "முத்தமிழ்த் துறை போகிய உத் தமப் பெரியாய்! அரியவற்று ளெல்லாம் அரியது யாது" என்று கேட்டனர். அதற்கப் புலமை மிக்காள்,

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிட ராதலரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீக்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையுந்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே"

என்று கூறினர். தனிப் பெரும் புலவனாகிய பெருமான், பண்டிதாய்! நின்சீரிய மதியால், கூறியது கேட்டக மகிழ்ந்தனம். பெரியவற்று ளெல்லாம் பெரியது யாது? அதனையும் நின்கனி வாயாற் புகல்க" என, ஔவைப்பிராட்டியார், அறுமுகப்பெருமான் றிருவடிகளை வணங்கிப் போற்றி எங்கள் குலதெய்வமே! செந் தமிழ்ப் பரம குருவே!! தேவரீரறியாததொன்றுண்டோ? எல்லாம் அறிந்த முதல்வராகிய நீர், நாயினுங் கடைப்பட்ட புன்மையளாகிய விப்பேதையை வினவல், மக்களைப் பெற்றோர் தங்கள் மதலையின் குதலைமொழி கேட்டின்புறுதல் போல ஆகும்"

"பெரியது கேட்கி னெரிதவழ் வேலோ
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான் முகன் படைப்பு

186950

நான்முகனோ கரிய மாலுந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடலோ குறுமுனி யங்கையி லடக்கம்
குறு முனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கந்
தொண்டர் தம்பெருமையைச் சொல்லவும் பெரிதே"

என்று கூறியது கேட்டுச் சர்வலோக சரண்யனாகிய சண்முகப் பெருமான், ஔவையாரின் அறிவின் மாட்சியை வியந்து, உவகை மிக்குளனாய் "செல்வியே! வினாக்களுக்கேற்றமாற்றமே நவின்றனை. நின் மதியே நன்மதி. நின்பாற் பெரிதும் மகிழ்வுற்றனம். பசி, பிணி, நரை, திரை, மூப்பு முதலியனவின்றி நெடுங்காலம் வாழ்வாளினை வையேல், சேரநாட்டிலே பெருமலையின் முழையிடத்தே, அமிழ்தின் றன்மையை யுடைய கருநெல்லிப் பழமொன்றுளது. ஆங்கு சென்று அதிகமான் நெடுமான் வஞ்சியைப் புகழ்ந்து, பாடிக் கேட்பையேல் ஈவான். அஃதுண்டு நெடுநாள் வாழ்ந்திருந்து, ஈற்றிலெமதுபத மடைவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இதனால் கல்விச் செருக் ககன்ற நம் ஔவையார், அவ்வாறே கொங்கு நாட்டுக்கருவூர் சென்று அரசிளங் கோயாகிய அதிகமான் நெடுமான் வஞ்சியைப் புகழ்ந்து பாடி, நெல்லியங்கனி பெற்றுண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தனர். பின் செவ்வேற் பெருமான் றிருவடிப் பெருவாழ்வையு மடைந்தன ரென்ப. ஆதலால்,

"கடலே யனையம்யாங் கல்வியா லென்னு
மடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக் கரசுகையான் முகந்து முழுங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்"

என்னுஞ் செய்யுளைச் சிந்தித்துக் கல்விச் செருக்கின்றி நாம் சீரிய செந்தமிழை யாதரித்து,

"தம்மிற் கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று"

எனக்கூறியபெரியோர் வாக்கைப்பேணி, மேன்மேலுங் கல்வியை விரைந்து கற்றுக் தமிழ்க் கலை நிரம்பிய புலவர் சிகாமணிகளாய்த் திகழவும், தாய் மொழியாகிய தமிழ் பண்டுபோல் என்றும் தழைத்தோங்கவும் முருகப்பெருமான் திருவருள் துணை புரிவதாக.

---

# மதிப்புரை மஞ்சரி.

திருஇலஞ்சி முருகன்உலா:—மேலகரம் பண்டாரக் கவிராயர் இயற்றியது. செந்தமிழ்வளர்க்கும் சீர்சால்பெரியரும் அந்தணர் திலகரும் ஆகிய மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்; சென்னைலா ஜர்னல் அச்சுக்கூடத்தில் பதித்து கலைமகள்வெளியீடுநாலாக வெளிவந்துலவுவது. இந்நூல் மூர்த்திதலமாதிய பெருமைகளைவிளக்கி 460 கலிவெண்பாக்களையுடையது. முருகவேள் திருவிழாக் கொண்டருளுங்கால் முதல்நாள் பிரமனாக இரண்டாம் நாள் திருமாலாக மூன்றும் நாள் உருத்திரனாக நான்காம் நாள் மகேசனாக ஐந்தாம் நாள் சதாசிவனாக ஆறும் நாள் ஆறுமாமுகத்தண்ண லாகக் காட்சி தருவதாகக் கூறுவனவாதிய சிறப்புகள் மேலாந்தத்துவக் கருத்துக்களை விளக்குகின்றன. உயர்ந்த நூல் சிறந்த பதிப்பு. விலை அணா 5. திருவேட்டீசுவரன்பேட்டை தியாகராஜ விலாசத்தில்பிரம்ஸ்ரீ ஐயரவர்கட்கு எழுதிப் பெறலாம்.

பழமலைக் கோவை:— துறைமங்கலம் சாமிநாதைய தேசிகரென்னும் வீரசைவக் கவிஞரால் இயற்றப்பெற்றது சென்னை மகாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உயர்திரு. உ. வே. சாமிநாதையரவர்களால் பரிசோதித்துத் தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன் பலவான்குடி சிவநேசன் அச்சியந்திசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது. 427 செய்யுட்கள் கோவைத் துறையின் முறைப்படி யமைந்த இந்நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள நயங்களையும் நுண்பொருள்களையும் நன்கு துருவியாய்ந்து மூர்த்தி, தலம், தீர்த்தம், பேறு பெற்றோர், பெரியோரியல்பு பறவை தாவரங்களின் இயல்புகள், உலக வழக்கச் செயல்கள், பழமொழிகளும் உலக வழக்குகளும், உவமைகள், பழயவரலாறுகள், ஒப்புமை, சொற்களும் தொடர்களும், எனப் பன்னிருவகையாகப்பகுத்து அவைகளை எடுத்தாண்டிருக்கும் திறன்களை விளக்கிக் காட்டும் ஐயரவர்களின் முகவுரையானது அழகினுக்கு அழகு செய்தாங்கு இந்நூலுக்குச் சிறப்புச்செய்து மிளிர்கின்றது. இதன் விலை அணா 10. திருவேட்டீசுவரன்பேட்டை தியாகராஜவிலாசத்தில் தமிழகத்தின் தவப்பேறாக விளங்கும் ஐயரவர்கட்கு எழுதிப்பெறலாம்.

சமணர் கழுவேற்றம்:—திருநெல்வேலிப்பேட்டை தமிழ்ப்பண்டிதர், சைவத் திருவாளர் ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள் இயற்றியது. சமணர் கழுவேற்றத்திற்கு எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டெமையாளும் சம்பந்தப் பெருமானார்மீது பழிதூற்றுவாரைத்தடிந்து அறிவு புகட்டுவது. கருணை சாகராகிய திருஞானசம்பந்தர், சமணர்களை அனல் வாதம் புனல் வாதங்களில் வென்றன ரென்பதையும், சிவனடியார் வதிந்த திருமடத்தில் தீக்கொழுவிய தீயமணரைச் செழியன் கழுவேற்றித் தெண்டித்து முறை புரிந்தான் என்பதையும் பெரிய புராண ஆராச்சியுடன் எழுதி வெளியிட்ட வசன நூல்.

வசன இரத்தினமிர்தம்:— ஆசிரியர், திரு. வ. மு. இரத்தினேசுவரையர் அவர்கள். ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விகழகத்தின் இரண்டாவது வெளியீடு. கடவுளே உலக முதல்வர்; அவர்பால் அன்பு செலுத்துவது கடமை; கடவுள் அன்பர்கள் அறநெறி யொழுகுவ தமுறைமை; அறத்தின் உறுதியைத் தேர்தற்குக் கல்வி இன்றியமையாமை என்னும் நோக்குடன் கடவுள், அன்பு, அறம், கல்வி என்னும் நான்கு விஷயங்களை விளக்கும் வசன நூல்.

## மதிப்புரை மஞ்சரி.

சைவப்பிரகாசிகை:— முதற் புத்தகமும் இரண்டாம் புத்தகமும் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அதிபர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்கள் எழுதி வெளியிட்டவை. விநாயகர், சிவபெருமான், முருகவேள், திருமால் முதலான தேவர்கள் வரலாறு, திருத்தொண்டர்களின் திறம், விபூதி உருத்திராக்கங்களின் மேன்மை திருத்தலங்கள்; தீர்த்தங்கள், திருநந்தனவனங்களின் சீர்மை, விரதங்களின்விழுப்பம், பண்டிகைகளின் பிரதாபம், முனிவராதிய பெரியார்களின் இனிய செயல்கள், பிரதாபசாலிகளின்பெருமிதம், கற்புடைமங்கையர்மாட்சி, இறைவரின் திருவிளையாடல்கள்; திருவருட்செயல்கள், சிவபுராணம்கேட்கும்செவ்வி, சைவர்களுக்குரிய விசேட இலக்கணம் ஆதியவைகளையும் பல நீதிகளுடன் பண்டிதர் பாமரர் ஆண் பெண் இருபாலாரும் அறிந்து கொள்ளும்படி மாணவர்களுக்கேற்ற முறையில் அடை மொழி வருணனை யாதியவைகளின்றி அரிய பெரிய விஷயங்களை ஒரே சமயத்தில் நன்கு படித்தறிந்து கொள்ளுந்தகையவாய் சுருக்கி விளக்கி, ஆசான் நேர்முகமாக இருந்து பாடம் போதிக்குந் தன்மையில் மிக எளிய நடையில் எழுதிப் பெரிய எழுத்துகளாற் பதித்து முதற்புத்தகத்தில் உஎ-வரலாறுகளும் இரண்டாம்புத்தகத்தில் கூஈ-வரலாறுகளும் உள்ள இப்பிரகாசிகைகள் பாடசாலை மாணவர்கட்குப் பெரிதும் உபயோகமாகும்.

சைவ சமய சாஸ்திரப் பிரமாணம்:— யாழ்ப்பாணம் சைவாபிமான சபையின்கண் சபையார் வேண்டுதலை யுவந்து அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்க ளவர்கள் செய்த பிரசங்கம். சைவசாஸ்திரங்களின் திரளை வரையறைசெய்து சைவ சாத்திர பிரமாணங்களாகிய வேத சிவாகமத்தின் வழி ஒழுகுதலினும் மேலாகிய புண்ணியமும் அவற்றைத் தூஷித்தலினும், மேலாகிய பாவமும் இல்லை என்னும் முடிவைத் தக்க பிரமாணங்களுடன் விளக்கக்கூடிய இது ஷை சபையாரால் அச்சியற்றி வெளிவந்துள்ளது.

அகில இலங்கை மகாநாடும் சிவஞானபோதமும்:—இது ஷை மகாநாட்டில் 1934ம் ஆண்டில் தலைமை வகித்த திருவாளர், ம. பாலசுப்பிரமணிய முதலியார் B. A. B. L. அவர்கள் "சிவஞான போதம்" மொழி பெயர்ப்பன்று; தமிழுக்கே யுரியது என்றதைமறுத்து சிவஞான போதம் என்னும் பெயர்முழுதும் வடசொல். வடமொழிச் சிவஞானபோதத்தையே ஸ்ரீமெய்கண்டதேவர் தமிழில் அருளினர். எனப்பல நூற் பிரமாணங்களால் விளக்கி மெய்கண்டதேவர் காலத்திற்குப் பல காலங்களுக்கு முன் ஸ்ரீமாணிக்கவாசகரை ஆட்கொண்ட இறைவர் திருக்கரத்திலிருந்ததும் வடமொழிச் சிவஞான போதமேயாம் எனவும் வலியுறுத்திச் சித்தாந்தம் செய்து யாழ்ப்பாணம் சைவாபிமான சபையாரால் எழுதிப் பதித்து வெளியிட்டது.

தீண்டாமை:—யாழ்ப்பாணம் சைவ சித்தாந்த சபையில் திருவாளர், க. சோமசுந்தரம் B. A. அவர்கள் செய்த பிரசங்கம் சைவாபிமான சபையார் பதித்து வெளியிட்டது. தீண்டாமை யொழிய வேண்டுமென்பாரின் கூற்றைக் கண்டித்து சுருதி யுத்திப் பிரமாணங்களுடன் தீண்டத் தகாமைக் குரிய காரணங்களைக் காட்டி அதனை வலியுறுத்துகிறது.

* பெருமிதம் வாய்ந்த அரிய நூல்களைப் பேரன்புடன் நம்பால் உதவிய பெரியார்கட்கு, எமது மனமார்ந்த வணக்கமும் நன்றியும் உரித்தாகுக.



முதன்மையான அறிவினையுடையவன், நிட்களன் - மாயாகாரியமான சரீரமில்லாதவன், பழையோன் - அநாதியாயுள்ளவன், பொருள்கள் இல்லோன் - உலகப் பொருள்களின் பற்று சிறிதும் இல்லாதவன், என்று அடிக்கடியும் நினைந்து - என்று இடைவிடாது சிந்தித்து, பிரமம் என நோக்குதலே இயல்பது ஆகும் - (தன்னைச்) சிவமாகக் காண்டலே சீவன் முத்தனது இயல்பாகும் எ - று.

(பொ - ரை.) நான் ஒன்றினும் பற்றில்லாதவன்; ஒப்பானவரும் மேலானவரும் இல்லாதவன்; உலகத்தைக் கடந்தவன்; உலகப்பொருளை நினைக்கும் நினைவிற்கு எட்டாது நிற்கும் அழிவில்லாதவன்; கண்ணிந்திரியத்திற்குக் காணப்படாதவன்; மனத்தினுள்ளே நிற்பவன்; இறத்தல் பிறத்தல் இல்லாதவன்; முதன்மையான அறிவினையுடையவன்; மாயாகாரியமான சரீரமில்லாதவன்; அநாதியாயுள்ளவன்; உலகப் பொருள்களின் பற்று சிறிதுமில்லாதவன் என்று இடைவிடாது சிந்தித்துத் தன்னைச் சிவமாகக் காண்டலே சீவன் முத்தனது இயல்பாகும் எ - று.

(க - ரை.) இதுகாறுங் கூறியவாறு சீவன் முத்தன் தன்னைச் சிவமெனக் காணும் இயல்பினை யுடையன் என்பதாம்.

நான் என்பதும் தன்னை யென்பதும் வருவித்துப் பொருள் முடிவு செய்யப்பட்டமை பொருந்துமென்பது, அடுத்துவரும் செய்யுளில் இப்படியே பாவித்து என்பதனாற் பெறப்படும்.

இயல்பது என்றவிடத்து அது பகுதிப் பொருள் விகுதி.

சிவனைச் சார்ந்து சிவமாய் விளங்கும் சீவன் முத்தன், சிவனுக்குரிய தருமம் அனைத்தும் தன்னிடத்து விளங்கப் பெறுவன் என்னுங் கருத்துப் பற்றி இவ்வாறு கூறினர். (சஎ)

### ஞானசார இயல்.

(அ - கை.) இதுகாறும் ஞானத்தினியல்பும், அதனைச் சாதிக்கும் முறையும், சாதித்தவனுக்குண்டாம் சீவன்முத்தி பரமுத்திப் பேறும் கூறிவிட்டு, இனி, ஞானசாரங் கூறத் தொடங்குகின்றார்.

48. இப்படியே பாவித்துச் சலியாதான் யாவனவன்
அப்பிரம மாதலா லமுதமா மழகியாய்
செப்பரிய வீடுபெறத் தெரிந்துரைத்த ஞானமீ
திப்பொழுதா சார்ந்தா னியம்புகின்றே னிதுகேட்பாய்.

(இ - ள்.) அமுதம் ஆம் அழகியாய் - அமுதம் போலும் இனிய மொழியினையும் அழகினையும் உடையவனே, இப்படியே பாவித்து சலியாதான் யாவன் - மேலைச் செய்யுளிற் கூறிய வண்ணம் தன்னைச் சிவமாகப்

பாவித்து அப்பாவனையில்நின்றும் நழுவாதவன் எவனோ, அவன் அப்பிரமம் ஆகலால் - அவன் அந்தச் சிவனாவன் ஆகையால், செப்ப அரிய வீடுபெற தெரிந்து உரைத்த ஞானம் ஈது - (உயிர்கள்) சொல்லுதற்கரிய வீடு பெறுதற்குத்தெளிந்து சொல்லப்பட்டஞானம்இதுவாகும், இப்பொழுது ஆசாரம் இயம்புகின்றேன் - இனி ஞானசாரத்தைக்கூறுகின்றேன், இது கேட்பாய் - இதனைக் கேட்பாயாக எ - று

(பொ - ரை.) அமுதம் போலும் இனிய மொழியினையும் அழகினையும் உடையவளே! மேலைச் செய்யுளிற் கூறிய வண்ணம் தன்னைச் சிவமாகப் பாவித்து அப் பாவனையில் நின்றும் நழுவாதவன் எவனோ, அவன் அந்தச் சிவனாவன். ஆகையால், உயிர்கள், சொல்லுதற்கரிய வீடு பெறுதற்குத் தெளிந்து சொல்லப்பட்ட ஞானம் இதுவாகும். இனி, ஞானசாரத்தைக் கூறுகின்றேன். இதனைக் கேட்பாயாக எ - று.

(க - ரை.) உயிர்கள் வீடுபெறுதற்பொருட்டு இதுகாறும் ஞானத்தைக் கூறினோம். இனி ஞானசாரத்தைக் கூறுகின்றோம் கேட்பாயாகஎன்பதாம்.

இகரச் சுட்டு அடுத்து நின்ற மேலைச் செய்யுளிற் கூறப்பட்டவற்றைச் சுட்டிற்று.

அமுதமாம் என்ற விடத்து ஆம், போலும் என்னும் பொருள் குறித்தது.

ஆசாரந்தான் என்ற விடத்து தான் - அசை.

சீவன், தன்னைச் சிவனாகப் பாவித்துச் சிவமாதல் எவ்வாறு கூடு மென்னும் வினாவும் விடைகளும் சருவஞானோத்தர விருத்தியில் கூறப் பட்டுள்ளன ஆதலின், † அவ்விடத்தைப் பார்த்துத் தெளிந்து கொள்க.

ஞானசாரம் - ஞானசாதகனது ஒழுக்கம். (சஅ)

(அ - கை.) சீவன் முத்தியடைதற்குச் சிவ பூசை முதலிய கிரியை வேண்டா மெனக் கூறுகின்றார்.

49. இந்த முத்தி யடைவதற் கேந்திழாய்
அந்த ஞான மலாதொரு ஞானமும்
சிந்தை செய்சிவ பூசையு மோமமும்
அந்தமில் சாதன மங்கி வேண் டாவால்.

(இ - ள்.) ஏந்து இழாய் - தாங்கிய ஆபரணங்களை உடையவளே, இந்த முத்தி அடைவதற்கு - இந்தச் சீவன் முத்தியடைதற் பொருட்டு, அந்த ஞானம் அலாது ஒருஞானமும் - மேலே கூறப்பட்ட சிவஞான

† சருவஞானோத்தரம் பக்கம். ௫0.



சாதன மன்றி ஏனைய பசு ஞான பாசஞானங்களும், சிந்தை செய்சிவ பூசையும் ஓமமும் அந்தம் இல் சாதனம் (உம்) - பசு கரணங்களாற் செய் யப்படும் சிவ பூசையும் அக்கினி காரியமும் முதலாக அளவில்லாத சாதனங் களும், அங்கி (உம்) - வேள்விகளும், வேண்டா - வேண்டப்படா எ - று.

(பொ - ரை.) தாங்கிய ஆபரணங்களை உடையவளே! இந்தச் சீவன் முத்தி அடைதற் பொருட்டு, மேலே கூறப்பட்ட சிவஞான சாதன மன்றி, ஏனைய பசுஞான பாசஞானங்களும், பசு கரணங்களாற் செய்யப்படும் சிவ பூசையும் அக்கினி காரியமும் முதலாக அளவில்லாத சாதனங்களும், வேள்விகளும் வேண்டப்படா எ - று.

(க - ரை.) சீவன் முத்தியடைதற்குச் சிவஞானம் ஒன்றுமே சாதன மாகு மன்றிச், சிவ பூசை முதலியன சாதனமாகா என்பதாம்.

நான் அறிவேன் எனக் கருதும் ஞானம் பசுஞானம். கருவிகளைத் துணையாகக் கொண்டு சுட்டி அறியும் ஞானம் பாசஞானம்.

பசுகரணம் - நான் என்னுந் தற்போதத்தோடு செய்யப்படும் செயல் களுக்குக் கருவியாயிருப்பது.

சிவபூசை முதலியன, ஞானத்தைத் தருமேயன்றிச் சீவன் முத்தியை நேரே தரா. ஞானம் ஒன்றுமே சீவன் முத்தியை நேரே தரவல்லது. இக் கருத்துப் பற்றி சிவ பூசை முதலியன வேண்டா எனப்பட்டன வாகலின், ஞானம் வருதற் பொருட்டு அவைவேண்டப்படு மென்பது அறிந்து கொள்க. இச் கருத்தினை 0"மேற் சரியைகிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாவாக லான்" என்பதனானும் அறிக.

சாதனம் என்ற விடத்தும் அங்கி என்றவிடத்தும் எண்ணும்மை வருவித்துரைக்க.

ஓமம் - சிவ பூசைக்கு அங்கமாகச் செய்யப்படும் அக்கினி காரியம்.

அங்கி - சோதிட்டோமம் முதலிய வேள்விகள்.

சிவ பூசை, அகம்புறமென இருவகைப்படுமாகலின், அகப் பூசை யோகத்தையும், புறப் பூசை கிரியையையுங் குறிக்கும். அங்கி யெனப்படும் வேள்வியும் கிரியையினுளடங்கும். சரியை வரும் செய்யுளிற் கூறப்படும்.

ஈற்றிலுள்ள ஆல் - அசை. (சகூ)

(அ - கை.) சீவன் முத்தியடைதற்கு நியமம் முதலிய சரியை வேண்டா மெனக் கூறுகின்றார்.

0 சிவஞான போதம் அ-ம் சூ-ம் க-ம் அதி. ஏது.

50. நியமங் கேத்திரம் பீடதீர் யாத்திரை
செயமுன் சொன்னவிச் செயல்விருந் தோம்பல்
பயனின் றாம்பிதிர் பூசையுஞ் சீலமும்
இவையவ தின்றா முத்தி யெய்து மிவர்கட்கே.

(இ - ள்.) செயமுன்சொன்ன - செய்யவேண்டுமென்று நூல்களில்முன் சொல்லப்பட்ட, நியமம் - சந்தியாவந்தனம் முதலிய நியமங்களும், கேத்திரம் - புண்ணிய தலங்களின் வாசமும், பீடம் - காஞ்சி முதலியவற்றிலுள்ள பீடங்களின் சேவையும், தீர்யாத்திரை - கங்கை முதலிய தீர்த்தங்களிற் சென்று ஆடுதலும், விருந்தோம்பல் - சிவனடியாரை உண்டி முதலியவற்றால் உபசரித்தலும், பிதிர்பூசையும் - பிதிர்க்களை ஆராதித்தலும், சீலமும் - வருணாச்சிரம ஒழுக்கங்களும் ஆகிய, இச்செயல் - இந்தச் செயல்கள், முத்தி யெய்தும் இவர்கட்கு பயன் இன்றாம் - சீவன் முத்தியைப் பெற விரும்பும் இந்த ஞானசாதகர்கட்குப் பயன்றருதல் இல்லை, இவையவது இன்றாம் - (ஆகையால் அவர்களால்) விரும்பப்படுதலில்லை எ - று.

(பொ - ரை.) செய்யவேண்டுமென்று நூல்களில் முன் சொல்லப்பட்ட சந்தியாவந்தனம் முதலிய நியமங்களும், புண்ணிய தலங்களின் வாசமும், காஞ்சி முதலியவற்றிலுள்ள பீடங்களின் சேவையும், கங்கைமுதலிய தீர்த்தங்களிற் சென்று ஆடுதலும், சிவனடியாரை உண்டி முதலியவற்றால் உபசரித்தலும், பிதிர்க்களை ஆராதித்தலும், வருணாச்சிரம ஒழுக்கங்களும் ஆகிய இந்தச் செயல்கள், சீவன் முத்தியைப் பெற விரும்பும் இந்த ஞான சாதகர்கட்குப் பயன்றருதல் இல்லை. ஆகையால் அவர்களால் விரும்பப்படுதலில்லை எ - று.

(க - ரை.) சீவன் முத்தியடைதற்கு நியமம் முதலிய சரியை சாதனமாகா தென்பதாம்.

க்ஷேத்திர மென்னும் வடமொழி, தமிழில் கேத்திர மெனத் திரிந்தது.

விருந்தென்பது புதுமை. அது, புதியராய் வரும் அடியாரைக் குறித்தது.

உம்மை, ஒவ்வொன்றினும் செல்லும். புண்ணிய தலங்களில் வசித்தலாலும், புண்ணிய நதிகளில் முழுகினமையாலும் சீவன் முத்தி உண்டாகுமென்று கூறும் புராணங்களோடு மாறுபட்டு, அச்செயல் சீவன் முத்தியை விரும்பும் ஞான சாதகருக்குப் பயன்றருதலில்லை யென்று இங்கே கூறினமையால், புராணக் கூற்றுப் பொய்யென இகழப்படாதோ எனின், படாது. என்னை, அச்செயல் சீவன் முத்தியை நேரே தருதலில்லை.



அக்கருத்துப் பற்றிப் பயன்றராதென இங்கே கூறினர். சித்த சுத்திவாயிலாய் ஞானத்தைத் தோற்றுவித்து அதன் வாயிலாய்ச் சீவன் முத்தியைத் தருமாதலின், அக்கருத்துப்பற்றிச் சீவன் முத்தியைத்தருமெனப் புராணங் கூறிற்று. ஆகையால் புராணக் கூற்றுப் பொய்யென இகழப் படாமை காண்க. ஏனையவும் இவ்வாறே கொள்ளப்படும்.

ஈற்றிலுள்ள ஏகாரம் - அசை. (௫0)

(அ - கை.) சீவன் முத்தியை விரும்பும் ஞானசாதகனுக்கு அட்டமி முதலிய விரத ஒழுக்கம் வேண்டா மெனக் கூறுகின்றார்.

51: தன்மமு மதன்மமுந் தன்னைச் சார்கிலா
என்னிலட் டமிமுதல் விரத மென்செய
மன்னிய வுலகினி லொழுக்கமு மற்றுள
கன்மமும் விடுதலே கருமங் காண்கிலே.

(இ - ள்.) தன்னை தன்மமும் அதன்மமும் சார்கு இலா என்னில் - ஆன்மாவாகிய தன்னை நல்வினையும் தீவினையும் பொருந்தா ஆதலின், உலகினில் மன்னிய - உலகத்தினிடத்துப் பொருந்தியிருக்கின்ற, அட்டமிவிரத முதல் ஒழுக்கம் - அட்டமிவிரத முதலிய நல்வினைகளும், மற்றுள கன்மமும் - ஏனைய தீவினைகளும், என்செய - எதற்காகச் செய்யவேண்டும், காண்கில் - ஆராயுமிடத்து, விடுதலே கருமம் - அவற்றை விடுதலே செய்யத்தக்கது எ - று.

(பொ - ரை.) ஆன்மாவாகிய தன்னை நல்வினையும் தீவினையும் பொருந்தா ஆதலின், உலகத்தினிடத்துப் பொருந்தியிருக்கின்ற அட்டமி விரதம் முதலிய நல்வினைகளும், ஏனைய தீவினைகளும் எதற்காகச் செய்ய வேண்டும். ஆராயுமிடத்து அவற்றை விடுதலே செய்யத்தக்கது எ - று.

(க - ரை.) ஞானசாதகன் உலக சம்பந்தமான செயல்களனைத்தையும் விடுதலே செய்யத் தக்கது என்பதாம்.

நல்வினைகள் தீவினைகள் செய்த வுயிரைச்சார்ந்து இன்பதுன்பமாகிய பலன்களைத் தருமென்பது, * "இதமகிதங்களெல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டிங் - கிதமகிதத்தாலின்பத் துன்பங்களீவன்" எனவும், ¶ "தன்ம மோடதன்மமாகித்தானிருபயனுந்தந்து" எனவும் கூறப்பட்ட திருவாக்குகளானும் பிறவாற்றானும் பெறப்படும். அவ்வாறாகவும், தன்மமும் அதன்மமும் தன்னைச் சார்கிலா என்றதன் கருத்தென்னை யெனின், கூறுதும்.

* சிவஞான சித்தியார் உ-ம். சூ-ம். செ. கங.

¶ ஷை ஷை செ. ௯க.

உயிருக்குப் பொதுநிலை தனிநிலை யென இருநிலைகளுண்டு. அவற்றுள், பொதுநிலையாவது - தனுகரண புவனபோகங்களோடு கூடி நிற்குநிலை. தனி நிலையாவது - அவற்றுடன் கூடாது நிற்கும் நிலை. பொது நிலை, சகலாவத்தை யெனப்படும். இந்நிலையிற்றான் வினை செய்தலும் அதன் பலனை யநுபவித்தலும் கூடும். இதனை, ‡ "உலகுடல் கரணங் காலமுறு பல நியதி செய்தி - பலவிவை கொண்டு கன்மம் பண்ணுவதுண்பதானல்" என்னுந் திருவாக்கானறிக. இனி, தனிநிலை, சுத்தாவத்தை யெனப்படும். இது, சாதனநிலை அநுபவநிலை யென இருவகைப்படும். அவற்றுள், உடல் யான் அன்று கருவிகள் என்னுடையன அல்ல எனவும், சிவன் நான் எனவும் சிந்திக்கும் நிலை சாதன நிலை. சிவனோடு பிரிப்பின்றி நிற்கும் தன் உண்மை நிலை விளங்கித் தோன்றச் சிவனாய் நிற்கும் சீவன் முத்தநிலை அநுபவநிலை. சாதகனுக்கு நல்வினை தீவினைகள் சீவன் முத்திப் பயன்றருதற்குச் சாதனமாகாமை பற்றியும், சிவமாய் விளங்கும் சீவன் முத்தனுக்குச் சிவத்தோற்றம் ஒன்றேயன்றி, உடற்றோற்ற முதலியன இல்லாமை பற்றியும், "தன்மமும் அதன்மமும் தன்னைச் சார்கிலா" என்றனர். இக்கருத்துப் பற்றியே, வினைப்பலன் செய்த உயிரைச் சாருமென்ற ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர், சாதன இயலுள், "0 ஞாலமதின் ஞான நிட்டை யுடையோருக்கு நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை - சீலமிலை தவமில்லை விரதமோடாச்சிரமச் செயலில்லை தியானமிலை சித்தமலமில்லை - கோலமிலை புலனில்லை கரணமில்லை குணமில்லை குறியில்லை குலமுமில்லை" என்றருளிச் செய்தனர்.

என்செய என்றவிடத்து வேண்டு மென்னும் ஒரு சொல் வருவித்துரைத்துக்கொள்க.

மற்று - நல்வினையைக் கூறி தீவினையைக் கூறுதற்கு இடையே நிற்றலால் வினைமாற்று.

கன்மம் - இவ்விடத்துத் தீவினையைக் குறித்தது. † வினைப் பகை என்றவிடத்துப் போல.

கருமம் - செயல். ஈற்றிலுள்ள ஏகாரம் - அசை. (௫௧)

(அ - கை.) சமயா சார முதலியவற்றை விடுதலே ஞானசார மெனக் கூறுகின்றார்.

‡ சிவஞானசித்தியார் உ-ம். சூ-ம். செ. உஉ.

0 சிவஞானசித்தியார் அ-ம் சூ-ம். செ. ௬உ.

† திருக்குறள் தீவினையச்சம் செ. எ.



52. சமயா சார சங்கற்ப விகற்பமும்
அமையா தாங்குல வாசார மானதும்
இமையா தாரும் விடாதவில் வாழ்க்கையும்
அமையார் தோளாய் விடுதலா சாரமே.

(இ - ள்.) அமை ஆர்தோள் ஆய் - மூங்கில் போலுந் தோள்களை உடையவளே, சமய ஆசார சங்கற்ப விகற்பமும் - சமய ஒழுக்கம் வேண்டு மென்று எண்ணுதலும் வேண்டுமோ வேண்டாமோ என்று ஐயுறுதலும், அமையாது ஆம்குல ஆசாரம் ஆனதும் - இந்தியமையாததானகுல ஒழுக்க மென்பதும், இமையாதாரும் விடாத இல்வாழ்க்கையும் - இமையா நாட்டத்தையுடைய தேவர்களும் விடாத இல்வாழ்க்கையும், விடுதலே ஆசாரம் - விடுதலே ஞான சாதகனது ஒழுக்கமாகும் எ - று.

(பொ - ரை.) மூங்கில் போலுந் தோள்களை உடையவளே! சமய ஒழுக்கம் வேண்டு மென்று எண்ணுதலும், வேண்டுமோ வேண்டாமோ என்று ஐயுறுதலும், இந்தியமையாததான குல ஒழுக்க மென்பதும், இமையா நாட்டத்தை உடையதேவர்களும் விடாத இல்வாழ்க்கையும் விடுதலே ஞான சாதகனது ஒழுக்கமாகும் எ - று.

(க - ரை.) சமய ஒழுக்கம் முதலியவற்றின் பற்றுவிடுதலே ஞான ஒழுக்கம் என்பதாம்.

சங்கற்பம் - எண்ணுதல்.

விகற்பம் - ஐயுறுதல்.

சமய ஒழுக்கத்திற்றவறின், பலனிழத்தலே யன்றித் தாழ்ந்த சமயத்தவனாதலில்லை. குல ஒழுக்கத்திற்றவறின் இழிந்த பிறப்பினனாவன். ஆதலின், குலவொழுக்கம்இன்றியமையாதது என்னும் விசேடணங்கொடுத்துக் கூறப்பட்டது. * "ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்னுந் திருக்குறள் இக்கருத்தினை வலியுறுத்தும். (௫உ)

(அ - கை.) சித்தி முதலிய அனைத்தும் துன்பத்திற் கேதுவாய்ச் சிற்றின்பத்தைத் தருமாதலின், அவற்றை ஞானசாதகன் விரும்பான் எனக் கூறுகின்றார்.

53. பல்வகைய சித்திகளும் பாதாளத் திற்செலவும்
சொல்லரிய பொருண்முழுதுஞ் சோராமற் பெற்றிடினும்
எல்லையிலா வின்பமா முத்திபெற வெண்ணுமவன்
அல்லறருஞ் சிற்றின்ப மடைய வவாவொழிவான்.

* திருக்குறள் ஒழுக்கமுடைமை செ. ௬.

(இ - ள்.) பல்வகைய சித்திகளும் - அணிமா முதலிய அட்ட சித்திகளும், பாதாளத்தில் செலவும் - பூமியின் கீழே உள்ள பாதாள வுலகங்களிற் செல்லும் திறனும், சொல்ல அரிய பொருள் முழுதும் - அளவிடுதற்கரிய பொருள்கள் அனைத்தும், சோராமல் பெற்றிடினும் - குறைவறப் பெற்றகாலத்தும், அல்லல்தரும் - அவை துன்பத்தைத்தருதற்கு ஏதுவாய, சிற்றின்பம் - வரம்புக்குட்பட்டு அழியும் சிறிய இன்பத்தை தரும் ஆகையால், எல்லையிலா இன்பமாம் முத்திபெற எண்ணும் அவன் - வரம்பிலின்பமாகிய முத்தியை அடைய விரும்பும் ஞான சாதகன், அடைய அவா ஒழிவான் - அவற்றை அடைதற்கு விரும்பமாட்டான் எ - று.

(பொ - ரை.) அணிமா முதலிய அட்ட சித்திகளும், பூமியின் கீழே உள்ள பாதாளவுலகங்களிற் செல்லுந்திறனும், அளவிடுதற்கரிய பொருள்கள் அனைத்தும் குறைவறப் பெற்ற காலத்தும், அவை துன்பத்தைத் தருதற்கு ஏதுவாய வரம்புக்குட்பட்டு அழியும் சிறிய இன்பத்தைத் தரும் ஆகையால், வரம்பிலின்பமாகிய முத்தியை அடைய விரும்பும் ஞான சாதகன், அவற்றை அடைதற்கு விரும்பமாட்டான் எ - று.

(க - ரை.) பேரின்பமாகிய முத்தியை விரும்பும் ஞான சாதகன், சிற்றின்பத்தைத்தரும் சித்தி முதலியவற்றை விரும்பான் என்பதாம்.

அட்டசித்திகளின் பெயரும் சித்தியின்திறனும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் அட்டமா சித்தி உபதேசித்த படலத்தில் விரிவாய்க் கூறப்பட்டிருத்தலால் அவ்விடத்துக் காண்க.

"எம்மை யுணர்ந்த யோகியர்கள் இவற்றை விரும்பார்" என அவர் கூறியவாற்றானும் ஞான சாதகன் விரும்பான் என்பது பெறப்படும்.

பாதாள வுலகங்கட்குச் செல்லுந்திறன், எட்டுத் திக்குக்களிலும் ஆகாயத்திலும் செல்லுந் திறனிலும் மேலானது.

சித்தி முதலியவற்றா லுண்டாகும் இன்பம் நிலைபேறின்றி அழிந்து பின் துன்பத்தைத் தருதற்கு ஏதுவாமாதலின், அக்கருத்துத் தோன்ற, அல்லல் தரும் என்பது பெயரெச்சமாய் நின்று சிற்றின்பம் என்னும் ஏதுப் பெயர் கொண்டது. (ருக)

(அ - கை.) அட்டமாசித்தி முதலிய அனைத்தும் முத்தியைத் தாரா எனக் கூறுகின்றார்.

54\. அட்டமா சித்திமுத லனைத்துள்ள பேறுகளும்
கட்டமாங் கதிகடரும் பரகதிகா ணக்கொடா
மட்டுலா மாலையாய் வியாபகமா யறிவாகிக்
கிட்டலா காமுத்தி மற்றிவற்றாற் கிடையாதே.

003711, N77SN
N35.?
186250

# செய்தித்திரட்டு.

பட்டுக்கோட்டை:-மங்களாம்பிகைதீர்த்தத்தின்மேல்கரையில் பரிமணங்குடி ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமிகள் பவ பங்குனி கஙஉ சிவயோக சமாதியுற்றனர். இம்மதி க௦உ பூஜா வைபவமாகும் என, பரிமணங்குடி சண்முகநாதசுவாமி கோயில் உரிமைத் தொண்டர், திரு. முத்துப் பிள்ளை என்னும் சஷ்டிச் சுவாமி பத்திரிகை தந்துள்ளார்.

தஞ்சை:— சைவ சித்தாந்த இளைஞர் சங்கம்; மயாண்டி சுவாமிகள் மடாலயம், சென்னைச்சைவசித்தாந்த மகா சமாஜத்தோடு இணைக்கப்பெறறது. நான்காம் ஆண்டு விழா பவ பங்குனி கசஉ தஞ்சை அரசர் அறநிலையப் பாதுகாப்பாளர், திரு. T. M. சோமசுந்தரம்பிள்ளை B. A. B. L. அவர்கள் தலைமையில்கூடிற்று. சங்கம் நிறுவியதுங்கர், திருவாளர் பா, சிவகுருநாதபிள்ளை அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தனர். சங்கத் தலைவர் தி. சு. சம்பந்தசாமி என்பவர் அறிக்கபடித்தனர். தலைவர் சைவச் சிறப்பையும், சைவ இஞர்களின் கடமைகளை மிகத் தெளிவாக எடுத்துக்கூறினர். சைவத் திருவாளர்களான பலவான்குடி, ...ரேசன் இராமசாமி செட்டியார்; முசிரி போர்டு உயர்தரக்கல்லூரித் தமிழாசிரியர் வீ. குமாரவீரையர்; குரு. வேல்சாமி, பி. நடராசன் என்ற சைவ இளைஞர் ...நவர்; திருவையாறு அரசர் கல்லூரி மாணவர், இரா. சுப்பிரமணியன்; தமிழ்ப் ...டிதர் பா. சிவகுருநாத பிள்ளை ஆகியவர்கள் முறையே, "ஏதாவது ...ஞான சம்பந்தர்பிரபாவம்" "பரசிவ வழி பாடு என்னும் அளாவளாவல்" "அளியற்றார்" "விருந்தோர் விருந்து" என்பவை பொருளாகச்சபையோர்வியக்குமாறு இனிமையாக விரிவுரையாற்றினர். தலைவர் முடிப்புரை கூற, சங்க அமைச்சர், சா. சிவராசன் என்பவர் நன்றி கூற இனிது நிறைவெய்தியது.

திருவையாறு:—ஸ்ரீ அறம் வளர்த்த அம்மை சமேத, ஐயாரப்பர் திருவிழா பவ மாசி ௬௦உ நந்திகேசுவரருக்குப் பட்டம் சூட்டுதல் பங்குனி கஉ திருமழபாடிக்குச் சென்று நந்திகேசுவரருக்கு மணம் புரிந்து திருநெய்த்தானம், கடுவெளி, திருமழபாடி, பெரும்புலியூர், திருவையாறு ஆகியபஞ்சபூதத் தலப்பிரதக்ஷணம் வருதல் ஆகிய நிறைவேறி உகஉ அனுக்ஞை விக்னேசுவர பூஜையுடன் எஉ கொடியேறி ஒவ்வொரு நாளும் விழாக்கள் நடைபெற்று சித்திரை௴ உஉ யாகிய இன்று ஏழாந் திருநாள் கோரதக் காட்சி நடைபெறுகிறது. ௬உ குதிரை வாகனக்காட்சியும், ரதாரோகணமும், சஉ தேர்த்திருவிழாவும், ருஉ நடராஜர்தெரிசனமும் ரிஷபவாகனக்காட்சியும் தீர்த்தம்அருளலும்சப்தப்பிரகார சேவையும், சுஉ குதிரை வாகனக்காட்சியும், எஉ பல்லக்கில் திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்னும் ஏழு தலங்கள் சூழவருதலும், அஉ பிராயச்சித்த அபிடேகமும் நடைபெறும்.

மகாபாரத மஹோத்ஸவம்:— திருவண்ணாமலைக்கு வடகிழக்கே பதினைந்து மயிலிலுள்ள கீக்களூர் ஸ்ரீ பாண்டவாலயத்தில் பவ பங்குனி உசஉதொடங்கி நாடோறும் பிற்பகல் ஒருமணிமுதல் ஐந்துமணிவரை புரிசை, பெருஞ்சொற்கொண்டல் திருவாளர் சு. முருகேச முதலியாரவர்கள் மகா பாரதப் பிரசங்கம் நடைபெறுவதுடன் இம்மதி உஉஉ. அக்னி வசந்தோற்ஸவமும், உகஉ ...ட்டாபிஷேகமும் ஆகும்.

---

**மகாகும்பாபிடேகம்:—** பழமலையின் பாங்கர், நல்லூர் ஸ்ரீபிரஹதாம்பிகா பாலாம்பிகாசமேத பில்வவனேசுவர சுவாமி ஆலயம் நல்லன்பர் பலரால் ஜீர்ணோத்தாரணம்செய்யப் பெற்றுளது. ஆனிமீ ௨௪௳ திங்கட்கிழமை உதயாதி ௧௰-நாழிகைக்குள் மகா கும்பாபிஷேகமும், மாலை மகாபிடேகமும், அன்றிரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும் நடைபெறும்.

**பூவாளூர்;—**சைவசித்தாந்த சங்கத்தின் ௨௫-வது ஆண்டுவிழா பவ பங்குனி ௨௪, ௨௫௳ களில் திருவாரூர் துடிசைக்கிழார் திரு, அ. சிதம்பரனார் அவர்கள் தலைமையில் புலவர் பெருமக்கள் பலரால் அரிய பெரிய விரிவுரைகளுடன் நிறைவேறியது.

**வேதாகம சைவசித்தாந்தசபை:—**யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இம்மதி ௭, ௮, ௯௳ களில் பிற்பகல் இரண்டு மணி தொடக்கமாக அரிய பெரிய விரிவுரைகளைப் புலமைமிக்கார்பலர் நிகழ்த்த நடைபெறும்.

**சிவாசாரியர்கள் செய்யும் திருக்கோயில் திருப்பணி:—**குத்தம் பாக்கத்தின் பக்கலில் நரசிங்கபுரத்தில் ஸ்ரீபர்வதவர்த்தனி சமேத ஸ்ரீபர்வதநாதேஸ்வர சுவாமி ஆலயத்திருப்பணி, தேவத்தானம்குருக்கள்மார்களால் செய்யப்பெறுகிறது; கூடிய சீக்கிரம் நிறைவேறி மகாகும்பாபிடேகம் நடைபெறும் எனசிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ கனககிரீஸ்வரக் குருக்கள் ஆகிய இருவரும் தெரிவிக்கின்றார்கள்.

**திருவாலங்காடு:—**ஊர்த்தவ தாண்டவ மூர்த்தியாகிய இரத்ன சபாபதிக்கு பவ பங்குனி ௯௳ வேதபாராயணத்துடன் விசேஷஅபிடேக அலங்கார நைவேதன திருவாராதனைகளும், சப்தபதமஹோத்ஸவமும், ௭௳ உத்திரநாள் திருவீதித் திருப்பவனி, மேளதானவிருதுகள்வாணக்காட்சிகளுடனும்,பிராமணர்களுக்குச் சமாராதனை சந்தர்ப்பணைகளுடனும், ஆதிசைவக் குருக்கள் மார்களால் அதி விமரிசையாய் நடத்தப்பெற்றது; பிரதி வருடந்தோறும் நடைத்தப்பெறும் என குத்தம்பாக்கம் சிவஸ்ரீ கனககிரீஸ்வரக் குருக்கள் தெரிவிக்கிறார்.

**ஆரணி ஜாகீர் தேவிகாபுரம்:—** ஸ்ரீ பிரஹந்நாயகி சமேத கனககிரீஸ்வரருக்கு வஸந்தோற்ஸவம் பங்குனி ௨௭௳ தொடங்கி பத்து நாள்வரை நடைபெறுகிறதென, தேவஸ்தானம் மணியம், பிரமஸ்ரீ நாராயண சாஸ்திரியாரும், சிவஸ்ரீ கனககிரீஸ்வரக் குருக்களும் தெரிவிக்கிறார்கள்.

**டேலுங்கான்சன் பேரா:—**தண்டாயுதபாணி திருக்கோயிலில் இம்மதி ௫௳ பௌர்ணமியில் மகேஸ்வர பூஜா வைபவமும், ௯௳ வெள்ளிரதத்தில் பெருமான் திருவுலாப்போந்தருளலும் சீரும் சிறப்புமாக நடைபெறும் என, தனவைசிய நகரத்தார்களிடமிருந்து திருமுகம் வந்துளது.

**திருத்தென்குடித்திட்டை:—**சிவாலயத்தில், பவ பங்குனி ௭௳ உத்திரத் திருநாள் மண்டபப்படி, திரு. வை. முத்தையபிள்ளையவர்களால் திருவுலா வாதியசிறப்புகளுடன் செய்யப்பெற்றது.

**அரிமளம்:—** சிவநேசச் செல்வர் அ. அரு. அண்ணாமலை செட்டியாரவர்கள் மூப்பினிலிருந்து பவ ஆண்டு பங்குனி மாதத்தில் சுகமே வந்துற்றார்கள். ஷை மாதம் ௨௪௳ அவர்கட்கு அறுபதாண்டு நிறைவு மணம் திருவருளால் சிறப்பாகநிறைவேறியது.

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு.ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.